உ

ஜோதிமயம்.

# ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(தமிழ்மறை)


ஆசிரியர்: தமிழ்ப்பூஷணம் ஸ்ரீமான் - வீ. ஆர். கேய்க்வார்.

| தொகுதி 2 | ரக்தாக்ஷிஸ்ரீ சித்திரைமீ<br>1924ஸ்ரீ ஏப்ரல்மீ | பகுதி 3 |
| --- | --- | --- |


## கடவுள் வணக்கம்.

அரிவையர் எனவரு காகத்திரள்களை
  அணுகேல் மயல் எனும் அலகான்றலியும்
இருநிதி சுதர் எனும் மேகம் எழும் திக்கு
  எய்தேல் கவலைத் திவலைகள் வீசும்
பொருவரு சமயக்காடு அணுகேல் தற்
  போதம் உரத்து எழுவாதம் அலைக்கும்
குருபரன் ஆம் நம் போரூர் இறையைக்
  கூவாய் வர நீ கூவாய் குயிலே.

(இ-ள்) மாதர்களென்று வரும் காகக் கூட்டங்களை நெருங்காதே, மயக்கமென்கின்ற அலகையினால் காவலுற்று இருக்கும் பெருஞ்செல்வமும் மக்களும் என்று கூறப்பட்டமேகங்களெழும் திசையை யணுகாதே மாறுக்கவலை யென்கின்ற தேன் துளிகளைச் சிதறும் ஒன்றுக்கொன்று ஓங்கி வளரும் சமயங்கள் என்கிற காட்டையடையாதே, ஆத்ம போதம் வலிவுபெற்று எழும்மாயாவாதத்தை அலைத்தகற்றும் நமது குருபரனை, திருப்போரூர் என்னும் திவ்வியஸ்தலமாகிய சமரபுரியிலெழுந்தருளிய முருகக்கடவுளை, குயிலே நீ வரும்படியாகக் கூவுவாயாக

காக்கை நிறத்தால் ஒற்றுமை யுண்மையாகின்றதால் குயிலே! நீ இனமென்று கருதாதே என்பதை காகத்திரள்களையணுகேல் எனவும், நீ மேகம் எழும் வடதிசையை நோக்கிக் கூவுதல் இயற்கையாத

லினால் நம் இறைவன் வரக்கூடியதான வடதிசையிதுவல்ல, இயமன்
வாழ்த்திக்கு என்பதை திக்கு எய்தல் எனவும், நீ சோலையைச் சென்
றடைதல் உன் செய்கையாகின்றமையினால் அது சோலையன்று பற
வைகள் உலவாததான அடவியென்பதைக் காடு அணுகேல் எனவும்
நீ காற்றைக்கண்டு மேகம் எழுதலையூகிக்கும் யூகமுடைய ஆதலால்
இது காற்று அன்று இதனை மாயாவாதம் என்பதை வாதமெனவும்
கூறினார். இதனால் இனம் என்று எண்ணியது காக்கைகள் என்றும்
மேகங்கள் என்றது அலகை விரும்பும் பொருளகளென்றும், சோலை
யென்று பார்த்து காடென்றும், காற்றென யூகித்து வாதமென்றும்
காட்டினேன் ஆதலால் குயிலே! நீ உன்னைமயக்கிய அவைகள்
என்னைமயக்காவண்ணம் அவற்றின் நிலைகலங்க அறிவுறுத்தியொழித்
தருளிய அருள் மேகத்தைக்கண்டு கூவுகயென்றதாம்.

இவண் குயிலென்றது மனம் ஆதலால் அம்மனத்தை நோக்கி
மனமே! நீ எனக்குத்துணையாயிருக்கின்றனை. நான் ஒரு பேரின்
பத்தை விரும்பி உனக்குத் தெரிவித்தேன். அதனை நீ அளிக்க
வேண்டி அவ்வின்பத்தைத் தருவோர் அறிவையர் என்று எண்ணினை
அம்மங்கையார் எத்தகையோர் எனின் உயிர் நீங்கிய உடலை (பிணத்
தை) உணவு எனக் கொத்தித்தின்னக்கூடிய காக்கையை யொத்தவர்
அம்மங்கையர் என்னை ஒரு சமயமேயன்றிப் பலசமயத்துவாதிக்கின்
றமையினால் காகத்திரள்களை யொப்பர். செல்வமும் மக்களுமோ
எனின் பேய்பிடிக்கப்பட்டவன் சுய அறிவுமாறி பித்தனாய்த் துன்பப்
படக்காண்கின்றோம். அது போலும் செல்வம் என்பது பெண்
பேய்மக்கள் என்பது ஆண் பேய் இவ்விரண்டு பேய்களின் வசப்படு
வேனானால் அறிவுகெட்டுத் துன்பம் அடைவேன் ஆதலால் செல்வ
மும் மக்களும் அலகைகளொக்கும். அன்றியும் செல்வமும் மக்க
ளும் இயமன் என்னைப்பற்றி வரும்படி விடுத்த தூதாதலால் அவை
களின் கண்களுக்குப் புலப்படுவேனாயின், என்னை விடாது துன்பப்
படுத்தும், அவ்விரண்டும் நரகம் காணப்படும் திசைகளாம் இவை
களை யொழித்து சமயங்கள் தெய்வங்களைநோக்கி வழி படுதலால்
அச்சமயங்களை நாடுவாயாயின் அவை நான் கருதிய தெய்வத்தை
யடையச்செய்யும் மார்க்கங்களன்று சிறுசிறு தெய்வங்களையடையச்
செய்யும் மார்க்கமும், அத்தகையச்சிறுதெய்வங்களோ சில காலத்
திற்குள் சிதையக்கூடியதாகும், ஆதலால் அவைகள் என்றும் அழி
யாததான பேரின்பம் தருவன வென்று அன்றியும் சூரபத்மன் முத
லிய அசுரர்களால் கவலைபட்டுத் திவலையைப்போலும் கண்களினின்
றும் நீரைச்சொரிகின்றன, அதனால் எனது பிறவி வெப்பம் ஒழிக்
கும் அருட் செறிந்த சைவசமயமாகிய சோலையன்று தெய்வங்கள்
கூடிக்குலாவும் இருளடைந்த புறச்சமயங்களாகிய காடாகும். ஆயி
னும் பல சமயங்களைக் கடந்து பிரமவிசாரஞ் செய்வோரை நோக்கு
வையேல் அவர்கள் பிரமத்தையே அனவரதமும் எடுத்துக் கூறுவா

ரைப்போல் பிரம்மம் பிரம்மமெனவாயால் சொல்லிக் கரணத்திலழியும்தம்மையும் கரணலிச யோகத்தாலழியும் தமது சிற்றறிவையுமே அநுபவத்தில் உரம்பெற நிலைநாட்டுவர். ஆதலால் தற்போதம் உரத்து எழுவாதமாம். இப்புறச்சமய நெறிகளெல்லாம் பறந்து ஓட ஆன்ம அறிவு செல்லும் இடமெல்லாம் கழித்து அறிவு செல்லாத இடத்தில் தோன்றும் முருகக்கடவுள் கண்ணுக்குப் புலனாகத் தோன்ற திருஞான சம்மந்தன் என்னும் திருநாமங்கொண்டு சீர்காழியில் வந்தருளினான் ஆதலினால் அக்குருபரனையே வரும்படியாகக் கூவுவாய் என்று கூறியது. அன்றியும் நீ அழைப்பதற்கு இறங்கி வந்தருளினால் என்னைச் சுழிந்தடித்தார்க்கும் மாயாவாத மொழிந்து திருவடி பேறு எய்துவேன் என்றும் தமது திரு உள்ளத்தை வெளியிட்டவாறும் ஆகும்.

பத்திராதிபர்.

# ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

சென்னை, ரக்தாக்ஷி௵ சித்திரை௴

1924௵ ஏப்ரல்௴

## நமக்கு வேண்டியதென்ன.

தற்கால நிலைமையில் நமக்கு வேண்டியது முயற்சியே யன்றோ? முயற்சியிருக்குமாயின் நாம் மனத்துடன் வாழ்வாகும். இன்றேல் நமக்கு மானம் என்பது உலகவழக்கில் வழங்கும் மரணமாகிய வானமேலாகிவிடும். முயற்சியென்பது உண்டாக வேண்டுமாயின் நம் நாட்டு மொழியில் நமக்குப் பூரண அறிவு வேண்டும். நமது சந்ததியார்களுக்கு நாம் செய்யவேண்டிய உபகாரம் தாய் மொழிப் புகட்டுவதே அன்றியும் பர்மா இந்தியா இலங்கை தேசம் முழுவதும் தமிழ் பேசும் ஜனங்கள் சுமார் 5 கோடிகளுக்கு மேல் அதிகமிருந்தும் எழுத்து வாசனை அறியாதவர்கள் அரைவாசிக்கு அதிகமாகவேயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. அந்தோ! என்ன பரிதாபம். நமது தாய் நாட்டில் தமிழ் என்னும் நம் சுயபாஷையை ஒவ்வொருவரும் அறியாதது என்ன விசனகரமேயாகும். மேநாட்டில் அன்று சாப்பாட்டுக்கு வழியில்லாவிட்டாலும் அரைபணா கொடுத்து ஒரு பத்திரிகையை வாங்கி வாசித்து அதிலுள்ள விஷயங்களை கிரஹிக்காமலிருக்க மாட்டார்களென்றால் நம் பாரத நாடு க்ஷீணித்துப போனதற்கு இதுவே காரணமாகும். இனிமேலாகிலும் நம் தாய்நாடு

க்ஷேமமடையவேண்டுமானால் ஒவ்வொரு கிராமங்களிலுள்ளவர்களும் தாய்ப்பாஷையை நன்றாய் கற்றுணரவேண்டும். இத்தகைய விஷயத்தில் ஊக்கம் அல்லது முயற்சி அவஸ்யம் அஃதின்றேல் நம்மவர்கள் நல்வழியடைதல் எங்ஙனங்கூடும்?

ஆகலினால் முயற்சியே ஒருவனை உயர்பதவிக்கு உயர்த்துவது முயற்ச்சியே ஒருவனை மேதாவியாக்குவது. இதனையே நாயனாரும்,

" முயற்சியே திருவினையாக்கும் முயற்சி இன்மை
இன்மை புகுத்தி விடும்" என்றும்

" மடி உளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையினாள்"

என்றதில் மடி என்பது சோம்பல் என்றும் முகடி என்பது மூதேவியென்றும் கூறியிருக்கின்றார்.

முயற்சியானது கஷ்டத்திற்குத் தகுந்த பலனைக் கொடுக்குமென்னும் உண்மையே:—

" தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக்கூலிதரும்" என்றும்,

" ஊழையும் முப்பக்கம் காண்பார் உலைவு இன்றி
தாழாது உஞற்றுபவர்"

என்றும் கூறியருளினரெனின், முயற்சியென்பது முயற்சித்தார்க்குப் பலனையளிக்கக்கூடிய தென்பதைக் கூறவேண்டுவதின்றெனினும் நமது ஸ்திதிமேன்மையடைவதற்கும், நமது நாடு க்ஷேமப்படுவதற்கும், நமது நாடு பிரகாசமெய்துவதற்கும், நமது நாடு செழிப்புற்று விளங்குவதற்கும், நமது நாடு புராதனமான நிலைமையையெய்தி புண்ணிய பூமியாய்—கற்றோர் விளங்கும் கவின் நிலமாய் துறக்கநாடாய்—மோக்ஷ சாதனத்துக் குரியதாய் விளங்குவதற்கு முயற்ச்சியே பிரதானமாகும்

முயற்சியினால் முடியாதகாரிய முண்டோ வெனின் இல்லையென்றே விடையிறுக்கப்படும். முயற்சியினாலேயே சகலகாரியங்களையும் சாதித்துக்கொள்ளலாம் அஃறிணை ஜீவராசிகளும் முயற்சிக்கின்றன வென்பதை ஆச்சாரக்கோவையில்,

" நந்தெறும்பு தூக்கணம்புள் காக்கை யென்றிவைபோல்
தம்கருமம் நல்லகடைப்பிடித்துத் தம் கருமம
அப்பெற்றியாக முயல்பவர்க்கு ஆசாரம்
எப்பெற்றியானும் படும்" என்றும்,

" இசையாது எனினும் இயற்றியோர் ஆற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை—இறையுங்கால்
கண்டல் திரையலைக்கும் கால் நலம் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாளே மற்று"

என்றும் காணப்படுகின்றமையினால் நாமும் முயற்சிப்போமாயின் நமக்கேற்பட்டுள்ள நெருக்கடிகள் நீங்கிவிடும் என்பதில் தடையில்லை. முக்கியமாய் நாம் ஒரு உறுதியைக் கையாளவேண்டும். அதாவது: தன்கையே தனக்கு உதவி' என்பதைக் கடைப்பிடித்து இனிவரும் நமது சந்ததியார்கள் மேன்மையும் சுகமும் மானமும் பொருந்தி வாழ்வதற்கான விஷயங்களை முயற்சித்து வருவதோடு அதை நிலைபெறச் செய்யவேண்டிய முயற்சியும் புரியவேண்டும். முயற்சியினால் மேன்மையே யெய்தலாகுமென்னும் மேலோர் மொழியில் ஔவைப்பிராட்டியும் முயற்சி உடையார் இகழ்ச்சியடையார் என்று கூறினார்.

இன்னும் முயற்ச்சியானது விரும்புவதை கைகூட்டுவிக்கும் என்பதை கந்தபுராணத்திலும்.

"நெடிது பற்பகல் செல்லினும் நிரம்புவதொன்றை
இடைவிடாமலே முயன்று பெற்றிடுகின்றது இயற்கை"

என்றும்,

"விடாது தனுவில்செயும் முயற்சி மென்மேல் பொருளை மிக வளர்க்கும்.

கெடாது சுற்ற நட்பினர் தம் கிளையும் தாங்கும்யாவர்க்கும்
தடாத உபகாரமும் புரியும் உடம் காமமையாளையும் சேர்க்கும்
படாத வாழ்வந்திடுகாறும்பயனே விளக்கும் பழியின்றும்

என்று விநாயக புராணத்திலும் காணப்படுவதினாலும், நாலடியாரிலும்:

" உலையாமுயற்சிக்களறு ஊழின்
வலிசிந்தும் வன்மையுமுண்டே — உலகு அறிப
யின்முளைதின்று மறலி உயிர்குடித்த
கான்முளையேபோலுங்கரி " என்பதனாலும்,

நமக்கு தற்காலம் க்ஷேமத்திற்குரித்தான முயற்சியே வேண்டும் நாம்முயற்சிப்பதானது நமது சந்ததிகளின் முன்னேற்றத்திற்குரியதான — சகலவிஷய விளக்கமும் உண்டு பண்ணக் கூடியதான தாய்மொழி யபிவிருத்தி செய்வதில் முயற்சி வேண்டும்.

நண்பர்காள் ! இதை முனைந்து செய்ய முன் வருவீர்களாயின் நமது நாடு மிகுந்த க்ஷேமத்தையும் பெருமையையும் அடையும்.

ஓம்தத்ஸத்,
பத்திரிகாசிரியர்

## பூதவதி அல்லது புனிதவதி

என்னும்

# காரைக்காலம்மையார் புராணம்.

46 ம் பக்கத் தொடர்ச்சி.

19. கறியமுதங்குதவாதே திருவமுதுகைகூட
வெளிமலர் மேற்றிருவனையார் விடையவன்றனடியாரே
பெறலறிய விருந்தானாற் பேறிதன்மேலில்லையெனும்
அறிவினராயவரமுது செய்வதனுக்கு ஆதரிப்பார்.

(இ-ள்.) அடியார்க்கு அமுதுபடைப்பதற்காகவேண்டி சமைய லிடத்தில் கறிவகைகள் சித்தஞ் செய்யப்படாமலும் அன்னம்மட்டும் தயாராயிருத்தலையுங் கண்ட வாசனை மலரினில் வீற்றிருக்கும் லக்ஷ்மியை நிகர்த்த அம்மையார் இவிடத்தில் வெறி என்றுகூறினது வாசனையையேயாகும்: வாசனைக்கு மயக்குஞ் சக்தியிருக்கின்றமை யினால் ஆசிரியர் வெறிமலர் என்று கூறினார். திரு அனையார் என்றது லக்ஷமிக்கு நிகரானவள் என்றதே யொழிய வேறன்று. லக்ஷ்மி யானவள் ஊழின்பயனுக்கு தக்கவாறு செல்வத்தை நல்குவளே யொழிய வேறு விதமாகச் செய்ய அசக்தியற்றவளாகின்றாள். அம்மை யாரே அங்ஙனமின்றி பசிப்பிணியென்று வருபவர்க்கும் மற்றெது வேண்டிவருபவர்க்கும் கொடுப்பவரென்பதை அம்மையார் சரித்தி ரத்தில் 15-வது செய்யுளில் "நம்பரடியாரணைந்தால் நல்ல திருவமு தளித்தும், செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலான தம்பரிவினாலவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்து,—" என்றும் காணப்படுகின்றமையினாலே (திரு அனையார் என்றார்) விடையவன் தன் அடியாரே என்பதற்கு நந்திவாகனனான பரமனின் அன்பரே யென்னும் பொருள் காணப்படினும் ஆசிரியர் இவ்விடத்தில் விடை யவன் என்று பிரயோகித்ததானது கவனிக்கற்பாலதாகின்றமையின் விடை அவன் விடையவன் என மருவிய தனபொருள் என்னையெ னின், உலகத்தில் ஜீவர்கள் புரியும் புண்ணியத்திற்குத் தகுந்த பல னாகவே யவரவர்களுக்குக் காட்சியும் பதவியும் தருபவனாதலால் விடை அவன் என்றார். புண்ணியம் என்னும் வினைவுக்கு விடையா னவன் அவன் என்றார்; அவன் என்றதனாலேயே தலைவன் எனப் பொருள் காணப்படாமலில்லை. "அகரமுதலெழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றேயுலகு" என்பதனாலையும். "அவனன்றி யோரணு வும் அசையாதெனும்" என்னும் தாயுமான ஸ்வாமிகளின் திருவாக் காலும் அறியப்படும். "அடியாரே பெறலரிய விருந்தானால் பேறு இதன் மேல இல்லை யெனும் அறிவினராய்" என்றதை அம்மையா ருக்குச் சங்கமபத்தியிலுள்ள ஊற்றத்தை விளக்கினர். அவ்வூற்றத் திற்குக் காரணமான அந்தபத்தியின் மாக்ஷிமையை,

" கற்றவர் கடவுள் தானம் சேர்ந்தவர்க்கு அனை கண்ணில்லார்
அற்றவர் அந்தணாளர் அன்றியும் அனையநீரார்க்கு
உற்றதோர் இடுக்கண் வந்தால் உதவுதற்கு உரித்து அன்று ஆயின்
பெற்ற இல் உடம்பு தன்னால் பெறுபயன் இல்லை மன்னோ" 128 என்று
" அங்கவரைக் காணப் பெறுகிற் பிறங்கை நீராடற் பேறு
மங்கவர்பாற் பேசப் பெறினகில தீர்த்தமுந் தோய்ந்தோராவ
ரங்கவர்க்குச் செய் பூசை யண்டருக்கு மூவருக்குமாகுங்கண்டா
யங்கவர்க்கே தானமளிப்பரவர்தபாலேற்பர் நல்லோர் 129 என்றும்,
" தேவர் கடேவனன்றோர் சீர் செழு மறையோன் போலாய்
மேவிய காலையம்மை விநாந்தெதிரேகிமற்றென்
காவலர் தம்பாலன்பரிலரெனக் கருதி யன்னான்
பூவடி வணங்கி வேண்டும் பூசனைபுரிந்து நின்றாள் " 130 என்றும்,
" அதிக நல்லற நிற்ப தென்றறிந்தனையறத்து
ளதிகமாஞ் சிவ புண்ணியஞ் சிவாரச்சனையவற்று
ளதிகமாஞ்சிவபூசையு ளடியவர் பூசை
யதிகமென்றறிந்தனபரையருச்சனை செய்வாய்" 131 என்றும்,

" வீட்டு நன்மை விளைநில மாமியோர்
நீட்டுதல் கரமென்று நினைத்தருண்
மாட்டுவித்தென வந்திரப் போர்கரத்
நீட்டுவான் பொருளெண்ணிலதாமரே" என்றும்,

காணப்படுகின்றமையால் அம்மையாரும் சிவனடியவராய் தம் வீடு சார்ந்த அடியவரை உபசரிக்கக் கருதியவராய் அவர் அமுது செய்தருளுமாறு அதற்குத்தக்க முயற்சியுடன் வேண்டுவன புரிந்து இலையில் சாதம் பரிமாறியதற்குடன்பெய்துண்ணுமாறு வேண்டுவனவாகிய தெதுவோ அதனையுந்தயாரித்து அவரையுபசரிக்கலாயினர்.

---

128 சூளாமணி, 129 காஞ்சி புராணம், 130 கந்த புராணம், 131 திருவிளையாடர் புராணம், 131 தேம்பாவணி. (தொடரும்).

வா. ஆர். கேய்க்வார்

## உருத்திராக்கம் பூணவேண்டிய தவசியமே.

(52 ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்நானம், தானம், ஜபம், ஹோமம், வைசுவதேவம், தேவபூஜை பிராயச்சித்தம், சிரார்த்தம், விசேஷமாக தீக்ஷகாலம், இவைகளில் ருத்திராக்ஷம் தரியாமல் ஏதேனும் வைதீககாரியம் செய்கிற எந்த மனிதனும் நரகத்திற்கு ஆளாவானென்று சாஸ்திரங்களில் காணப்படுகின்றன.

விரல். சங்குமணி, புத்திர ஜீவமணி, தாமரைமணி, ஸ்படிகமணி தர்ப்பை முடிச்சு இவைகளில் ஏதாவதொன்றினால் வித்வானானவர்கள் ஜபிப்பார்கள். ருத்திராக்ஷத்தினாலேயே ஒவ்வொரு நாளும் சோம்பலில்லாமல் மந்திரத்தைச் செபிக்கவேண்டும். ருத்திராட்சத்தினாலேயே ஜெபிக்கிறவர்கள் எம்பெருமானுக்குச் சமானமானவர்கள்.

விரலால் ஜெபித்தால் ஒரு குணம், விரலிரையால் ஜெபித்தால் எட்டுக்குணம், சங்குமணியால நூற்றெட்டுக்குணம்: புத்திரதீபத்தால் முன்னூறுகுணம். தாமரைமணியால் ஆயிரங்குணம், ஸ்படிகமணியால் முப்பதினாயிரங்குணம், தர்பை முடிச்சினால் கோடி கோடி குணம், ருத்திராக்ஷத்தால் ஜெபித்தால் உண்டாகுங்குணம் இவ்வளவென்று சொல்லமுடியாது. எப்பொழுது ருத்திராக்ஷங்களினாலேயே ஜெபிக்கவேண்டும். ருத்திராட்சதாரியை ஒருவனாலும் கொல்ல முடியாது. உலகத்தில் எம்பெருமானைப் போல் சஞ்சரிப்பான். அப்படியே அவன் மனிதர்களால் எப்பொழுதும் நமஸ்காரஞ் செய்யத் தகுந்தவன்.

எச்சிலுடையவனாயிருந்தாலும், கெட்டதொழிலிருப்பவனாயிருந்தாலும் ருத்திராக்ஷ தாரணத்தால் சர்வபாவங்களிலு மிருந்து விடுவிக்கப்படுவானென்று சாஸ்திரங்களில் காணப்படுகின்றன.

ஜெபம் தியானம் இவைகளில்லாதிருந்தாலும் ருத்திராட்சத்தைத் தரிப்பதினால் சகலபாபங்களிலுமிருந்து விடுவிக்கப்பட்டவனாகி மேலானகதியையடைவான். எவர்கள் கண்டத்தில் ருத்திராக்ஷத்தை தரிக்கிறார்களோ அவர்கள் வீட்டில் சுகமுண்டாகும், பாவகர்மங்களைச் செய்தவர்களாயிருந்தாலும், அவர்கள் மேலானகதியை அடைகிறார்கள். ருத்திராட்சதாரணஞ் செய்தவனுக்கு அன்னங்கொடுப்பவன் இருபத்தொரு குலத்தையுங்கடத் திருத்ரலோகத்தை யடைவான். எவநெற்றியில் விபூதி இல்லையோ, சரீரத்தில் ருத்திராட்சதாரணமில்லையோ, எவனுடைய கிரகத்தில் சிவ பூஜையில்லையோ, அந்தமனிதன மிருகஜாதியிலுங் கேவலமானவனென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மாமிஷத்தைப்பட்சிக்கிறவனாயிருந்தாலும், மதுபானம் அருந்துறவனாயிருந்தாலும், நீசஸ்திரீயைச் சேர்கிறவனாயிருந்தாலும், ருத்திராட்சம் தலையிலிருக்குமாயின் பாவங்களிலிருந்து விடுபடுவான்.

நான்கு வேதங்களைப்படித்தாலும், புராணங்களைப்படித்தாலும் தீர்த்தயாத்திரை செய்தாலும், சகலவித்தைகளை அறிந்தாலும், உண்டாகிற சகல புண்ணியத்தையும் ருத்திராட்சம் தரித்தால் அடைகிறான். ஒருவன் மரணகாலத்தில் ருத்திராட்சத்தைத்தரிப்பித்துக் கொண்டு சாவானானால் ருத்திரத்வத்தை அவன் அடைகிறான். மருஜெனனமில்லை.

ஒவ்வொரு மனிதனும் ருத்திராட்சத்தைச் சிரசில் தரித்தால் கோடிபங்கு புண்ணியம், காதுகளில் தரித்தால் பத்துக்கோடி, கண்டத்தில் கட்டப்பட்டால் நூறுகோடி, உச்சியில் ஆயிரங்கோடி, உபவீதத்தில் தரித்தால் பதினாயிரங்கோடி, புஜங்களில் லட்சங்கோடி, மணிக்கட்டில் தரித்தால் கணக்கில்லை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ருத்திராட்சம் மோட்சத்துக்குச் சாதனமானது.

(கந்தர்) எம்பெருமானை நோக்கி பரமேசுரர் கழுதையானது எந்தகாரணத்தால் ருத்திராட்சத்தைச்சுமந்தது? கிடைங்கை எப்படி அடைந்தது? என்று கேழ்குங்கால் எம் பெருமான் சொன்னதாவது விந்திபபருவதத்தில் ருத்திராட்ச சுமையுடைய ஒரு கழுதை வழியில் ஒருவனால் நடத்தப்பட்டு, அதிக சிரமமடைந்து, அந்தப் பாரத்தை சுமக்க சக்தியற்றதாய் பூமியில் விழுந்து இறந்து போய் விட்டது. அது அச்சமயம் சூலபாணியான மஹேஸ்வர ரூபத்தை யடைந்தது. என்னுடைய அனுக்ரகத்தால் என் சமீபம் அடைந்தது ஆனால் சுமக்கப்பட்ட ருத்ராட்சங்களின் முகங்களின் கணக்கெவ்வளவோ அவ்வளவாயிர வருஷகாலம் அந்தக்கழுதை சிவலோகத்தில் மேன்மையாயிருந்தது. என்று கூறினார். என்று சாஸ்திரங்களில் காணப்படுகின்றன.

ருத்திராட்சதாரணத்தில் வெட்கமுள்ளவர்களுக்கு கோடிஜனனமாணுலும் சம்சாரத்திலிருந்து மோட்சமானது கிடையாது. ருத்திராட்சதாரியைப்பார்த்து பரிகாசஞ்செய்கிறவன் உற்பத்தியை வித்வான் கலப்பானதென்று அறியவேண்டியது. என்றும், மேலான குலத்திலுண்டானவனாயிருந்தாலும், விபூதி ருத்திராட்சம் இவைகளைத்தரித்தவனைப்பார்த்து உயர்ந்த ஆசனத்திலிருப்பானானால் பாழ் நரகத்தை அடைகிறான் என்றும் ருத்திராடசதாரிக்குப் பக்தியுடன் வஸ்திரமாவது, வேறு எதையாவது கொடுத்தால், சகல பாவங்களிலிருந்தும் விடுபட்டவனாய்ச் சிவலோகத்தை அடைகிறான் என்றும் ஷையானின் பாதங்களை அலம்பி அந்த தீர்த்தத்தைக் குடிக்கிறவன் சகலபாவங்களிலிருந்தும் விடுபட்டவனாகி சிவலோகத்தில் மேன்மையாக இருப்பானென்றும் சாஸ்திரங்களில் காணப்படுகின்றன.

இவ்வுலகத்தில் ருத்ராட்சதாரணத்தைக் காட்டிலும் சிரேஷ்டமானது வேறொன்று மில்லை. மந்திரமில்லாமலுண்டாகிற குணங்களே சொல்லப்பட்டன.

(தொடரும்).

A. S. T. மஹாராஜ்.
திரவியபட்டணம், சுரண்டை.

## பார்த்திபசிவபக்தி.

(55-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடனே துரியோதனன் இன்னசெய்வது என்று தோன்றாமல் குன்றி திகைத்து சபையோர்களைப் பார்த்து, பஞ்சபாண்டவர்களை நாட்டை விட்டுக் காட்டுக்கு துரத்தியும் அவர்கள் அவர்களுடைய துர்க்குணங்களை விட்டாரில்லை. அவர்கள் தான் இம்முனிவனை என்னிடம் அனுப்பித்து என்னை இச்சாபத்துக்குள்ளாக்கினார்கள். ஆகையால் நான் அவர்களைக்கொல்லத் துணிந்துவிட்டேன். என்னைத் தடுக்கலாகாது என்று சொல்லி கர்ணனையும் சகுனியையும் படைத்தலைவராக நியமனம் செய்து, பாண்டவர்களை துவம்ஸம் பண்ண காமிய வனத்தை நோக்கிப் புறப்பட்டபின் வேதங்களை சிக்கு அறுத்த முனிவரை வழியில்கண்ட துரியோதனன் இரதத்தை விட்டுக்கீழே இறங்கி எதிர்கொண்டு அழைக்க, வியாச முனிவர் அவனுக்கு ஆசிகள் கூறி, பாண்டவர்களின் மேல்படை எடுத்துச் செல்கின்றான் என்பதை அறிந்து துரியோதனனைப்பார்த்து எ கௌரவர்களுக்கு தலைவனான துரியோதன மகாராஜனே! ஒரு மஹா ராஜாவானவன் எப்படி ஒரு பரம ஏழைமேல் படை எடுத்துச் செல்வானோ அதே மாதிரியாக நாட்டைத்துறந்து காட்டில் வாசம் செய்து கொண்டிருக்கிற, பேதைகளாகிய பாண்டவர்களின் மேல் படையெடுத்துச் செல்வது அநீதி ஒரு அரசனானவன் அதருமத்தை நீக்கி தருமத்தை காக்க வேண்டும். கொடுங்கோலை அகற்றி செங்கோலை நிலை நிறுத்த வேண்டும். பாபச்செய்கைகளை அறவே நீக்கி புண்ணியத்தை சம்பாதித்தல் வேண்டும். குற்றம் செய்தவர்களை தண்டிக்க வேண்டும். ஒரு குற்றமும் செய்யாதவனை மரணதண்டனை விதிப்பது கொடுமையன்றே, திருஷ்டாந்தமாக சிலப்பதிகாரத்தில் பாண்டிய ராஜன் நிராதிபதியான கோவிலனை வஞ்சிப்பத்தன் சொல்லைக்கேட்டு, கோவிலன், தான் நிராதிபதி என்று பல அருமையான திருஷ்டாந்தங்களால் நிரூபித்துங்கூட அவன் தான் திருடன் என்று அநியாயமாக தீர்ப்புசெய்ததாலன்றோ அவனும் அவனுடைய குடிகளும் மடிந்தது மன்றியில் நாடும் அழிவுற்றது! ஆகையினாலே பேதையர்களாகிய பாண்டவர்கள் ஒரு குற்றமும் உங்களுக்கு செய்யாமலிருக்கும் பொழுது அவர்களைக் கொல்ல படை எடுப்பது உசிதமன்று என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இதைக்கேட்ட துரியோதனன் இவரிடத்திலும் கோபித்துக் கொண்டோமாயின் அயத்தீரீய முனிவருடைய சாபம் போதாதன்றி இவருடைய சாபத்திற்கு ஆளாகவேண்டும் என நினைத்து தன்னுடைய பரிவாரங்களுடன் வந்தவழி பார்த்துக்கொண்டு அஸ்தினபுரத்தை யடைந்தான்.

பிறகு வியாசமுனிவர் காமியவனத்தை அடைந்து பாண்டவர்களைச் சந்தித்து அவர்களால் பூஜை செய்யப்பெற்று நின்றார்.

அப்படி நிற்பதைப் பார்த்து பாண்டவர்களின் மூத்தவனான தரும னந்தனர் துரியோதனன் என்னை அநியாயமாக சகுனியுடன் சூதாடச்செய்து, என்னுடைய ஆபரணங்கள், ரதகஜ துரக பதாதிகள், நாடுகள் முதலியவற்றை பிடிங்கிக்கொண்டும், எனது அன்பரான தம்பிமார்களை அடிமைகளாக வைத்தும், என்னுடைய சொந்த மனைவியாகிய துரோபதையை ஈடாகவைத்தும், அக்கொடும்பாதகனாகிய துர்சாதனன் அவளை மானபங்கம் செய்ததுமன்றியில் பன்னிரெண்டு வருஷம் வனவாசம் செய்து பிறகு ஒரு வருஷம் அஞ்ஞாத வாசமும் செய்துவைந்தால் நாடுகொடுப்பேன் என்று சொன்னதிற்கிணங்கி நாட்டை விட்டுக் காட்டிற்கு வந்தேன் என் பொருட்டு என் தம்பிமார்களும் கஷ்டப்படுகிறார்கள். என்று வருந்தி நிற்பவரைப் பார்த்த வியாச முனிவரானவர், நீங்கள் பன்னிரண்டு வருஷம் பூர்த்தியாய் வனவாசம் செய்தும், 1 வருஷம் அஞ்ஞாதவாசம்செய்து வந்தால் கூட உங்களுக்கு நாடுகொடான். போர் செய்து தன் உயிரை இழப்பான் அவனுக்குப்பக்க பலங்கள் இருக்கிறது அவனை அவன் பொறுமையினால் மமதை கொண்டிருக்கிறான் அவனை நீங்கள் சாமானியன் என்று எண்ணிவிடலாகாது உங்கள் கைபலத்தால் தான் ஆகவேண்டும், ஆகையினாலே அப்படி நீங்கள் உங்களுடைய விரோதிகளுடன் போர் செய்து ஜெயிக்க வேண்டுமானால், கைலாசகிரியில் வசிப்பவரும், பார்வதி காந்தராயும்; பாற்கடலில் மந்தரை என்னும் பருவத்தை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பை கயிராகவும், தேவர்கள் ஒரு புரமும் ராட்சதர்கள் ஒரு புறமும் சிலுப்ப அதிலிருந்து கடைசியில் ஜெனித்த ஆலகால விஷத்தைக் கண்டு தேவாசுரர்கள் பிரம்மன், விஷ்ணு முதலானவர்கள் பயந்தோட அவர்களுக்கு அபயஸ்தம் கொடுத்து 'அஞ்சேல' எனததேற்றி அக்கொடிய விஷத்தைத் தன்கண்டத்தில் அடக்கிக்கொண்டதினால் "திரு நீலகண்டம்" என்று பெயர் பெற்றவராயும், முக்கண்ணராயும், பகீரதன் தன் முன்னோர்களாகிய சாகரர்களை நல்லகதியடையும் பொருட்டு, வானுலகத்திலிருந்து கங்கையை கொண்டு வரும்பொருட்டு தவம் செய்து, அதிக உக்கிரத்தோடு வந்த கங்கையினுடைய கர்வத்தை அடக்கிய வராயுமுள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் வசத்திலிருக்கிற பாசுபதாஸ்திரத்தைப்பெறவேண்டும் அதைப்பெற்றால் நீங்கள் துரியோதனனுடைய செருக்கை அடக்கி நீங்களும் வெற்றிபெறலாம் அதைப் பெறத்தக்கவன் அர்ச்சுனனே அவன் ஒருவனே அதை அடையத்தக்க ஒப்பிலா மாணிக்கம். ஆகையால் அருச்சுனன் பாசுபதாஸ்திரத்தின் பொருட்டு சிவபிரானை குறித்து தபசுபுரிந்து அதை பெறட்டும் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பிறகு வேதவியாசர், அர்ச்சுனனை தவக்கோலத்துடன் வரச்செய்து, ஆசிர்வதித்து மந்திரோபதேசம் செய்து வெள்ளிமலைச் சார

லில் தபசுசெய்ய உத்திரவு செய்து விட்டு, தருமராசன் முதலானவர் களுக்கு ஆசி கூறி அவ்விடத்தை விட்டேகினர். வேதவியாசர் கூறிய படி அருச்சுனன் காண்டீபம் என்னும் வில்லை எடுத்துக்கொண்டு அம் புறாத்துணியையும் எடுத்துக்கொண்டு ஒரு நல்ல சுப முகூர்த்தத்தில் தருமஸ்வரூபியான தருமனந்தரை வணங்கி ஆசீர்வாதம் பெற்று தனது தம்பிமார்களுக்கு ஆசி கூறி, காமியவனத்தை விட்டுப் புறப்பட்டு அநேக காடுகளையும் மலைகளையும் கடந்து வெள்ளிமலைச் சாரலை அடைந்தார்.

அவ்விடத்தில் சிலர் அக்கினிகுண்டம் வளர்த்தி அதின் நடுவில் நின்று தபசு செய்துகொண்டும், சிலர் ஒரு காலில நின்று கொண்டும், சிலர் தலைகீழாய்த் தொங்கிக்கொண்டும் மற்றும் சிலர் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டும் தவம்புரிவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு தானும் ஒரு நல்ல நதியில் ஸ்நானம் செய்து, நித்திய கர்மானுஷ்டா னங்களை செவ்வனே செய்து பத்மாசனம் போட்டுக்கொண்டு சிவ பிரானிடத்தில் தன்னுடைய கவனம் முழுவதையும் வைத்து தவம் புரியலானர். அவர் செய்த தவமானது வானுலகத்தில் வசிக்கும் தேவர்களையும், மும்மூர்த்திகளையும் தகிக்கத்தொடங்கியது தேவர் கள் தங்களுடைய அரசனுகிய ஆயிரம் அசுவமேதம்செய்த இந்திர னிடத்தில் போய்முறையிட, இநதிரன் அவர்களுக்குச் சமாதானம் கூறி அர்ச்சுனனுடைய தபோபலத்தை சோதிக்க விருப்பங்கொண்டு தன்னுடைய அரண்மனையில் நடனங்கள் புரிபவரும்,பார்த்தமாத்திரத் தில் ஆடவருடைய மனதை கவரச்செய்யும் அழகு வாய்ந்தவகளு மாகிய ரம்பை, மேனகை, ஊர்வசி திலோர்தமை முதலானவர்களை வரச்செய்து அவர்களுக்கு பின் வருமாறு கட்டளை இட்டார். "ஓ மங்கையர்க்கரசிகளே! நீங்கள் இது பரியந்தம் எத்தனையோ தபசிக ளுடைய நிஷ்டைகளை பங்கம்பண்ணி யிருக்கிறீர்கள் இப்போது சந் திரகுல வம்ஸத்தில் உதித்த அருச்சுனன் வெள்ளியங்கிரியில் உக்கிர மாக கடுமையான தபசு செய்து வருகிறன். அவனுடைய தபசை நீங்கள் கெடுக்கவேண்டும்" என்று கட்டளை இட்டான். அவர்கள் உடனே பூலோகத்தில், மனதைக் கவரும்படி பிரயத்தனப்பட்டும், ஆசைமொழிகளால் அவன் அருச்சுனன் இருக்குமிடத்திற்கு வந்து, அவன் முன்னிலையில் நடனங்கள் செய்தும் அருச்சுனன் ஒன்றுக்கு மிசையாதது கண்டு வெட்கி தேவலோகம் அடைந்தனர்.

தேவேந்திரனிடத்தில் அத்தேவதாஸ்திரீகள் போய் முறையிட, தன்னுடைய உபாயங்கள் பயனடையாதது கண்டு ஒரு தபசிபோல் வேடம்பூண்டு, அர்ச்சுனனிடத்திற் சென்றார். அவரைக்கண்ட அர்ச்சு னன் தனது பக்திமுழுவதையும் சிவபிரானிடத்தில வைத்து அவ ருக்கு மரியாதை செய்தான் பிறகு இந்திரன் அர்சுனனைப் பார்த்து நீ எதற்க்காக கடும்தவம் புரிகின்றனை என்றார். (தொடரும்),

T. S வெங்கட்டராமன், கோயம்பத்தூர்

# ஆன்மாவேபுத்திரன்

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

I

மைந்தர்கள் எந்தையர்கட்கு கீழ்ப்படிந்து ஒழுகவேண்டிய மாதிரியிசில்லாமல், பழமையான வழக்க ஒழுக்கங்களினின்றும் விலகி நவீன நாகரீகமெனக்கொள்ளும் ஒழுங்கீனமான மாதிரியில் பயின்று நல்லமேன்மையான குடும்பங்களை சீர்கேடுறச் செய்கின்றனரென சாதாரணமாய் எங்கு நோக்கினும் அவச்சொல் கிளம்பலாயிற்று. பெற்றோர், சுற்றத்தினர் முதலான பெரியோர்களை முனிந்து வார்த்தையாடாமலும், பின்னொன்றும் முன்னொன்றுமாய்ப்பேசி அவமதிக்காமலும், உண்மையில் நிகழ்ந்திராதவைகளை உண்டெனக்கூறி மதிப்பற்றனவும் அவமானமுறும்படியானவுமான வீண்பழிச் சொற்களை வாய்கொண்டமட்டும் அங்குமிங்கு மெங்கும் கண்டவிடமெல்லாஞ் சொல்லி தூற்றிக்கொண்டு டீபமானியாய் திரியாமலும், ஒருவரைக் களிப்புறச் செய்யுமாறு பொய்யான வசைச்சொற்களை நிஜம்போல் சொல்லியும் பின்னால் அவையின்கண் ஊமையைப்போல் விழிக்காமலும், உட்பகையாளிகள் வஞ்சனையாய் வெளிக்கு நண்பர் போல் நடித்து தம்வாய்ச்சொற்களைப் பிடுங்கக்கருதி கபடமாய்ப்பேசவருங்கால், தம்குலம் கோத்திரம் குட்டுகளையெல்லாம் பல்லைஇளித்துக் கொண்டு பிறர்நகைக்ககூறாமலும், சற்றும் பொருமையில்லாதவர்களிடம் சண்டை செய்யாமலும், மனோதைரியமிருந்தாலும், தம்மைத் தாமே புகழ்ந்து பேசிக்கொள்ளாமலும் சாவதானமாயிருந்து, நம்பத்தகுந்தவர்களிடம் நம்பிக்கைவைத்தும். நம்பத்தகாத கொடிய வஞ்சகரை நம்பாமல் அகற்றியும், தந்தையர், பெரியோர், குரு, தெய்வத்தினிடத்தில் பயபக்தி விசுவாசமும், அடக்கமும், தமக்கு கீழ்ப்பட்டவரிடத்தில் அன்புள்ள வார்த்தையும், கேவலம் கீழ்மக்களைத் தெரிந்து சகவாசஞ்செய்யாமலும், நண்பரையும் அன்பரையும் உயிரென நேசித்தும், தத்தம் குலாச்சார மதாச்சார, தொன்றுதொட்டு வழங்கி வரும் வழக்கவொழுக்கங்களினின்றுஞ் சிறிதும் நழுவாமலும், பிறருக்கு (அங்ஙனஞ் சத்ருக்களுக்கு) எள்ளளவும் இடந்தராமலும் நன்மையையே கருதியொழுகும், குலதீபம் போல் விளங்கும் பிள்ளைகளன்றோ நல்லபிள்ளைகள். மேற்கூறியவைகட்கு மாறுபாடாய் நடப்பவர்கள் அணிப்பிள்ளைகளேதான் தென்னம்பிள்ளைகட் கொப்பிடுவோமென்றாலோ, அவைகள் பல விதமான உபயோகத்திற்கு உதவுகின்றனவே!

மேற்கூறியவாறே பெண்மக்களும் நடைபெற வேண்டும், குலமணிகளாம் பெண்மணிகளோ கண்மணிகட்கொப்பாவார்கள். வழக்க

வொழுக்கங்கள் மட்டு மரியாதைகள், பயபக்தி விசுவாசம், நாண் மடம் அச்சம் பயிர்ப்பென்னுங் குணங்களைப் பெரிதும் பாராட்டுந் தன்மை குலாச்சார மதாச்சார தர்மங்கள், கைப்பிடித்த கொழுநனையேதெய்வமெனப் பேணுதலாகி நற்குணம்படைத்த சிலவதிகளே. குணமணிகளாவார்! வந்தகுலம் போந்தகுலம் இவ்விருகுலங்களையும் விளங்கவைக்கும் புனிதமணிகளாவர். யெப்படி யெனில், பெண் மணிகள் தம் கன்னிப்பருவம் நீங்கும் வரையில் தந்தையர்களைப் போற்றிப்பணிந்தும், யௌவன தெசையில் கொண்ட கணவனையே தெய்வமெனக்கருதி யொழுகியும் உலகு புகழ்ந்து கொண்டாட சீருஞ் சிறப்புமாய் இக்குலமணியைக்காட்டிலும் நன்மணியாம் மடவாலைக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை யென்று வாழ்த்துமாறு நடைபெற வேண்டும். அப்படி நடைபெற்ற நாரீமணிகளுள் மகா உத்தம குணம் பொருந்திய ரமணீவணியாம் "சுலோசன" தேவியார் அன்னவரது திவ்ய கதையையே இந்த ரஞ்சிதன் வாயிலாய் நாடக நடையில், வெளியிடலாயினம். ஆயினும், ரஞ்சிதன் மாதந்தவறாது ஒவ்வொருகாட்சிக்கு குறைவுபடாமலேனும் தன் மழலையால் எங்கும் வீசுவானேயானல், எந்தப்புண்ணிய சீலராயினும் முன்வந்து அந்த நாடகத்தைப் புத்தகரூபமாக்கி, வெளியில் உலாவச்செய்து, ஆதிசேஷனுடைய நற்புதல்வியாம் சுலோசன தேவியாரின் கற்பின் மகிமையை பிரகிருத பெண்மணிகள் படித்துத்தெரிந்து, அந்நடையில் பழகி யொழுகப்போதிய பேருதவியாகுமன்றே! தன்னை வளர்க்கும் போஷகமணியாம் முதலியாரவர்களையும் சுலோசனையை உருவாக்கி வெளியிட ரஞ்சிதனும் தூண்டுதல்தருமே! "மத்திம்ய மத்ம்ய பானீயஞ்சமர்ப்பயாமி" என்று எடுத்துக் கொண்ட விஷயத்திலிருந்துஞ் சிறிது நழுவி மனங்கவலை பாய்கின்ற தென்று இதனை வாசிப்போர் நினைக்கமாட்டீர்களென்று நம்புகிறோம். ஆண்மக்களைப்பற்றி சொல்லி வருங்கால் பெண்மக்களைப் பற்றியும் சிறிது புகல்வது நியாயமாமன்றே. நமது கேள்விக்குவந்ததா யொரு விஷயத்தை இனி கூறுவாம்.

(தொடரும்.)

துறையூர் சுப்பராமய்யர்

---

## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.



நம் ரஞ்சிதன் அபிவிர்த்தியை முன்னிட்டு நமது எடிடரான ஸ்ரீமான் வாசுதேவராவ் கேய்க்வார் அவர்கள் தர்சமயம் சந்தாதாரர்களை சேர்க்க தென்னாட்டுபக்கம் வந்திருக்கிறபடியால் ஒவ்வொரு சந்தா நேயர்களும் அவரை அன்புடன் ஆதரித்து ரஞ்சிதன் விஷயத்தில் ஊக்கமெடுத்து பல சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுக்க கோருகிறேன்.

எம். சம்மந்த முதலியார், பத்திராதிபர்.

## மதனசுந்தரி அல்லது மர்மக்கொலைகள்.

(61 ம் பக்கத் தொடர்ச்சி.)

அப்போதும் அவனது இருவிழிகளினின்றும் வெள்ளம்போல் பெருகிக்கொண்டே யிருக்கும் கண்ணீரானது தன்னை நோக்கி வந்துகொண்டிருக்கும் உருவத்தை இன்னாரென்று தெரிந்துக்கொள்ளமாட்டாமல் இடரச்செய்தது. அந்தகாரமும் அடிக்கடி கண்களை யிருளச்செய்தது. வானத்தில் ஒரு நட்சத்திர மேனுமில்லை. அமாவாசையாதலால் ஆதித்தன் தனதரிய நண்பனாகிய சந்திரனை வெளிவராமல் தடுத்து ஒளித்துக்கொள்ளும்படி செய்தான். ஆகாயத்தை அளாவிய வாயுபகவான் வீசும் சுகந்தரும் காற்றானது சுவாலைப்போற்றோன்றியது.

இப்படியிருந்தும் அவ்வுருவம் அதி விரைவாய் தன்னையே நோக்கி வந்துக்கொண்டிருக்கிறது. காரிருள் மதனனின் கண்களை கண்ணீரால் கலங்கச்செய்துக்கொண்டேயிருக்கிறது. புத்திதடுமாறுகிறது. மதுபானம் செய்தவன் தனதாருயிர் அறிவையிழந்து தள்ளாடி தட்டு தடுமாறிக்கொண்டுப்போவது அறிவையிழந்த ஆநந்தநடனம் செய்துகொண்டே சென்றான். அவன் புத்திசபலமடைந்தவன் போல் தோன்றினான்

அவனது மனமோ அனலிலிட்ட புழுவைப்போல் துடிக்கிறது. ஒவ்வொரு நிமிடமும் அவ்வுருவம் யாரோ, எவரோ, எனத் திடுக்குண்டுத் திகைத்தான். பிரகாசமென்னும் பிறனொருவன் அவ்வுருவத்தைக் கண்டறிய ஒருவித உதவியும் புரியவில்லை.

தன்மீதுள்ள கோபத்தால் தனதண்ணன் தான் அவ்விதம் அதி விரைவாய் வருகிறாரோ, என அஞ்சினான், அவர் தன்னைக்கொன்றுவிட்டபோதிலும், தனதருமைந்த காதலியும், ஸர்வேஸ்வரனால் சகலவித நற்குண நல்லழகமைந்தவளும், தன்னை எவ்விதத்திலும் காதலனாக நினைக்கும் சுந்தரியின் பொருட்டு தன் உயிரை ஒரு பொருட்படுத்தாமல் வெறுத்து இழக்கவும் தீர்மானித்தான். இதென்ன விசித்திரம்! மதனனின் உயிர் பிரிந்து உதவியில்லாமல் போனால் நமது சுந்தரிக்கு மேலும் அனேகவித துன்பங்கள் புதிது புதிதாக உண்டாகுமே என்று நினைத்தானா? இல்லை, அவன் தன் உயிர் பிரிந்தால், தனது காதலி தன் அன்பார்ந்த காதலன் ஆன்மா எங்குச் சென்றதோ அவ்விடத்துக்கு தானும் தன் உயிரை மாய்த்துக்கொண்டு தன்னுடன் வந்து சேர்வாளென நினைந்தான்.

என்ன ! சகல உயிர்களையும் எறும்பு முதல் யானைவரை யாதரித்துக்கார்க்கும் தயாபரனாகிய சர்வேஸ்வரன் தன்னை யெவ்விதத்

திலும் காப்பாற்றுவார் என்று நம்பிக்கைக்கொண்டு கைகுப்பிப் பணிந்தான். நினைந்தான் ஏங்கினன். இடரினன். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி தன தேழையான கோழைநெஞ்சத்தை புண்ணாக்கிக்கொண்டான், மரு நிமிடம் தனது மனத்தை திடத்துடன் திருப்தி செய்துக்கொண்டான். அப்பொழுதே சற்று தூரத்தில் வந்துக்கொண்டிருந்த வுருவமும் கிட்டி நெருங்கியது. இச்சமயம் நமதஞ்சா நெஞ்சம்படைத்த வீரனாகிய நமது மதனன் எவ்வளவோ தைரியத்துடனிருந்தும் சற்று அச்சத்தால் சிறிது அஞ்சி நடுங்கினன். அவ்வுருவமும் அருகில் வந்து விட்டது. அப்போது ஆந்தை, வெளவால், என்ற இன்னும் மற்ற பறவைகள் அலறும் சத்தத்தால் இவனும் அலறும்படியாயிற்று. மறுநிமிடம் அவனே சீ, சீ, என்ன நான் கோழையா? ஒரு காலுமில்லை யென தைரியங்கொண்டு அவ்வுருவம் யாரென அறியும் பொருட்டு எதிர் நோக்கி அதிவிரைவாய்ச்செல்லுகிறான். அதற்குள் அவ்வுருவமும் கிட்டி வந்து வாய்திறந்து பேசுவதுபோல் தோன்றியது மருநிமிடம் அவ்வுருவம் " ஆ! நானையா " என்றது.

அப்போதுதான் மதனன் அவ்வுருவமானது தனதரும் நண்பனாகிய சாமளவர்ண முதலியாரென்று அறிந்தான் தனக்காகவும் தனது நிலமைக்காகவும், தனதாருயிர் நண்பன் அலறுவதைக் கண்ட மதனன் தன் மனதிலுள்ள துக்கத்தை அடக்கமாட்டாமல் கண்களினின்றும் மாலை மாலையாக கண்ணீரைப்பெருக்க விட்டான். பிறகு மதனன் சாமளனை நோக்கி,

மதனன்:—சாமளா நடந்ததை கவனித்தாயா?

சாமளன்:—ஆம், நான் தற்செயலாய் இந்த இடத்திற்கு வர நேர்ந்தது. அப்பொழுதுதான் உனது தமயன் உன்னை இன்னத் துக்காக கடிந்து கொள்ளுகிறாரென்பதை மறைவிடமிருந்து அறிந்தேன்.

மதனன்:—நண்பா கடவுளின் கடாட்சத்தை யாரறிவார். நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும் என்னும் படியான ஆன்றோர் வாக்கியம் பொய்யாமோ? ஆகாது. நான் என்ன செய்வேன் அவர் செப்பியதை நினைக்கையில் எனது நெஞ்சம் அஞ்சி திடுக்கிடுகிறது எனக் கண்ணீர் விட்டுக்கொண்டே கூறினன்.

சாமளன்:— நண்பா, அழாதே கலங்கிக்கண்ணீர் விடுவதில் என்னபயன். செய்வதென்ன எல்லாம் விதிப்பயன். விதியைவெல்ல எவராலாகும். அப்பேர்பட்ட பெரிய ஜெமீன் குடும்பத்தை பிரிப்பதற்கு பரமனிட்ட விதிப்போலும் அழுதென்ன பயன்.

மதனன்:—சாமளா! நான் என் செய்வேன் என் மனதைதேற்றிக்கொள்ளலாமென்றாலா என் தமயன் செப்பிய மொழிகளெல்லாம்

கூறியாம்பத்தை போன்றும் நெஞ்சை கத்தியால் வெட்டுவதைப் போன்றும் அறுக்கிறது மனமும் துடிக்கிறது.

சாமளன்:—நண்பனே என்ன செய்வது எல்லாம் வல்ல ஈச னின்செயல்களும், கடாட்சமும் அப்படிக் கிருப்பின் நாம் என் செய்வது எல்லாம் கற்றுணர்ந்த நீயே இப்படி வருத்தப்பட்டால் வேறென்ன வேண்டியிருக்கிறது.

மதனன்:— மறந்தேன், அப்பா சாமளா நான் ஒரு கொடுஞ் சபதம் போன்றும், கூறியவாளையொடுக்கும் அச்சபதத்தை உன்னால் தான் முடிக்கவேண்டுமெனவும் விரதங்கொண்டிருக்கிறேன். அதை முடிக்க நீதான் தகுந்ததோர் யுக்திசொல்லிக்கொடுக்கவேண்டும்! என அருமையுள்ள நண்பனே நீயாது சொல்லுகிறாய்?

சாமளன்:—உன்பொருட்டெனதுயிரையும்விட அஞ்சேன் என் பதை நன்றாயுணரவும்.

மதனன்:—ஆம், நாம் எங்காவது ஒருதனியிடம் போகவேண் டும். அவ்விடத்தில் தான் யோசிக்கவேண்டும்.

சாமளன்:—ஏன் நமது ஜோதி விலாசத்திற்கு செல்லுவோம் அவ்விடத்தில் எனதறையில் யோசிப்போம் வா, போகலாம் என்றான்

பிறகு இருவரும் மௌனம் சாதித்துக்கொண்டு ஜோதிவிலா சத்தை நோக்கி செல்லலாயினர். (தொடரும்.)

R. G. ராஜன், திருச்சினுப்பள்ளி.

## பாணுசூரன்.

ஸ்ரீமத கண்டாகார நித்த வியாபக சச்சிதானந்த ஸ்வரூப சாட்குண்ய பரிபூரண பரமபதியாகிய சிவபெருமானால் அனுக்ரகம் பெற்ற மாபெலிச்சக்கிரவர்த்தியின் மகனாகிய ஆயிரங்கைகளையுடைய வாணாசுரன். சுப்ரதீபிகை யென்பவளை மணந்து நருமதை நதிக் கரையில் நாளொன்றுக்கு ஆயிரம் சிவலிங்க குறிகளைப்பூசித்து வரு கையில் ஒரு நாள் சிவ பெருமான் பிரசன்னராகி, "ஏ? வாணா உமக்கு என்ன வரம் வேண்டும்" என்று கூற, வாணன், மகிழ்ச்சி யுடையவனாய், "எம் பெருமானே? அடியேனுக்கு அக்கினி மதிலும் அவனிமுழுவதும் அரசு புரியும் ஆற்றலும், அழியாமையும், தேவரீரது அடித்தாமரையில் அன்பும என்னாளுமிருக்க அவாவினேன். என கைலை பெருமான் அவ்வாறேயளித்து அந்தர்த்தானமாயினர். பின்னர் வாணாசுரன் வையகமுழுதுங் கைபகப்படுத்தி, "சோணித புரியில்" அரசுபுரிந்து வருகையில், ஒரு நாள் "கண்ணுதலைத்" தரி சிக்கக் கயிலாயமடைந்தனன் அது சமயம் அருள் வள்ளல் நடிக்குங்

தருதியாயிருத்தலின், தனது ஆயிரங்கைகளாலுங் குடமுழவு வாசிக்கக், மாதுபங்கன் மகிழ்ந்து, "யாதுவரம் வேண்டும் ஓதுக" என, அசுரன் அண்ணலே அடியேன் திருக்கயிலாயகிரியில் வந்து திருநந்திதேவரால் பிரம்படிபட்டுச் சலியாமல், கஜமுக ஷண்முகபார்வதி சமேதராய்த் தேவரீர் எப்பொழுதும் அடியேன் மாளிகையிற் காட்சி கொடுத்து வீற்றிருக்கவேண்டுமென்று விண்ணப்பிக்க, நம்பெருமான் "அவ்வாறேயாகுக" வென்று சோணிதபுரமுற்று வாணன் மாளிகையில் வாழ்ந்திருந்தனர்.

இங்ஙனம் நிற்க, ஓர் நாள் வாணன், இந்திரன் முதலிய எண்டிசைத்திறைவர், திசைமுகன், திருமால் முதலிய தேவர் கூட்டத்துடன் எதிர்த்து உயுத்தம் செய்ய, தேவர்கள் முடியாமல் ஓடிப்போனமையால் மமதை மிக்கவராய் மகாதேவனை நண்ணி, அண்ணலே? அடியேனுடன் அமர் செய்வோர் அகிலத்தில்லாமையால் தோள்கள் தினவுற்றன. சிறிது செருச்செய்ய திருவுள்ளங்கொள்ள வேண்டும் என சிவபிரான் புன்னகைகொண்டு, சிறிது மஞ்சாமல் இவ்வாறு கூறியதை யெண்ணி, "கண்ணன் துவாரகையிலிருந்து வந்து உன் தோள் தினவு தீர்த்து அவற்றை விரைவிற் சங்கரிப்பான் என, வாணன் "இருபது தரம் எதிர்த்தோடிய இக்கிருஷ்ணனு என்னைச் செயிக்க வல்லவன்?" என, உலகநாதன், "உனக்குத் தோற்றபின் உபமந்யு முனிவனிடம் தீட்சை பெற்று இடைவிடாது எம்மை யருச்சித்து உன்னைவிட மேலாகிய உரைத்தற்கரிய வலிபெற்றுள்ளான்." என "அச்சமர் எப்பொழுது வரும்" என "உன் மகள் மேல் பழிவரும்; உன்மயூரத்துவஜம் துணியும்; அதுவே போரெய்துங்காலம்" என்றறைய வாணன் அச்சமரை யெதிர் பார்த்தவனுய் தன்மாளிகை சேர்ந்து வசித்திருந்தான்.

நிற்க, ஒரு நாள் வாணன் மகள் உஷை யென்பவள் துயிலுகையில் கண்ணன் பௌத்திரனுகிய அநிருத்தன் கலந்ததாகக் கனவு கண்டு கண்விழித்து காணமல் மோகாக்கிற சித்தமுடையவளாய், சித்திரரேகை யென்னும் தோழி எழுதிக்காட்டிய சித்திரபடங்களால் அம்மன்னவனை குறிப்பித்து அத்தோழியால் துவாரகையில் சயனித்திருந்த அநிருத்தனை மஞ்சத்துடன் வருவித்து நெஞ்சங்களித்து இன்பம் நுகர்ந்திருந்தாள். உஷை சிறிது நாளிற் கருப்பங்கொண்டனள். தோழிமாரால் அதையுணர்ந்த வாணன் அநிருத்தனைச்சிறையிட்டான். அதற்காக உஷை மனம் வருந்தினள். வாணன் மாளிகையிலுள்ள மயூரத்துவஜம் அன்று ஒடிந்தது. அவற்றை யெல்லாம் அறிந்த நாரதமுனிவர் துவாரகை சென்று கண்ணனுடன் கூறினர். மனவருத்த முற்ற கண்ணன் எண்ணில்லாத சேனையை இமைப்பொழுதிற்கூட்டிக்கொண்டு போர்க்கோலமாய்ச் சோணிதபுறத்தையடைந்தனன்.

பிறகு வாயிலில் முதற்பெருங் காவலாயுள்ள ஐங்கரக்கடவுள், முருகக்கடவுள் உமாதேவியார் முதலியோரைப் பூசித்து பணிந்து உட்செல்லுகையில் சிவபெருமான் முன்னொருகாலத்தில் மைநாகபருவதத்தில் தவஞ் செய்துக் கொண்டிருந்த திருமாலுக்கு " யானே எதிர்த்தாலும் நீ ஜெயிக்கக்கடவாய் " என்று அளித்த வரத்தைப் பாதுகாக்கும்படி தனது பிநாகமாகிய வில்லை ஏந்தி நிற்கக்கண்டு சிவ நாமங்களைப்பாடி " எளியேனைக் காத்தருளவேண்டும் " என்று வணங்க, நிமலர், ஏ ? கண்ணு நீயெம்மை வென்றன்றோ வாணனை யெதிர்க்காலம் என்று விநோதமாகக்கூறினர். உடனே கண்ணன், அச்சமுற்று இறைவனைப் பலவகையாகத் தோத்திரஞ் செய்து பணிந்து நின்றனன். அதுகண்ட பரமன் பன்னகசயனனைப் பார்த்து ஏ ? விண்டுவே ? எம்மைக்கண்டு நீ அஞ்சவேண்டாம், உனது வருகையை வாணனுக்கு முன்னரே உரைத்துளோம் அவனைச் செயித்து வெற்றிமாலை அணிபக்கடவாய். நீ எம்மோடெதிர்த்தால் முருகன் விளையாட்டுப்போல நினைப்போம். தேவர்கள் வேடிக்கை பார்க்கும்படியாயிருவருஞ் சிறிது நேரம் செருச்செய்வோம். பகைமையாக யுத்தஞ்செய்யோம்: அஞ்சவேண்டாம் " என்று பலவகையாகத் தேற்றி கண்ணுதல் தன் கையிலேந்திய பிநாகம் என்னும் வில்லை வளைத்து நாணேற்ற, நாரணன் " நாதனே ! அடியேனைக்காக்க " வென்று தனது சாரங்கம் என்னும் வில்லை நாணேற்றினன்.

இங்ஙனம் இருவருஞ்செய்த நாணொலி திரிலோகத்திலிருந்த தேவர் மானவர் நாகர்களைச் செவிடுபடுத்தியது. உலகம் நடுங்கியது பின்னர் இருவரும் அஸ்திரசஸ்திரங்களால் எண்ணில்லாகாலம் கடும் போர்செய்கையில் கண்ணன் கண்ணுதலைப்பணிந்து " அண்ணலே ? நான் அமர்புரிய இனி ஆற்றலில்லேன் " என்றடிபணிய, அடியார்க்கனுகூலராகிய அம்பிகாபதி அச்சமரில் அச்சுதனுக்குச் செயமளித்து அஞ்சினர் போல அப்பாற்பட்டனர். நிற்க, அங்ஙனம் அண்ணல் கண்ணனுடன் அமரில் அஞ்சினர் போல அகன்றது அதிசயமன்று, " விஷவ்ருக்ஷோபி ஸம்வ்ருத்ய ஸ்வயம் தேசத்தும சாம்பிரதம் " என்னும் சாஸ்திரவிதிப்படியே நச்சுமரமாயிருப்பினும் தன்கையால் வளர்த்துத்தானே சங்கரித்தல் தகாதெனக்கருதி, " வாணனுக்கு தோள்தினவு தீரவேண்டும் என்றும், மைநாககிரியில் தவஞ்செய்த திருமாலுக்கும் அருளிய வரத்தை நிறைவேற்ற லீலாமாத்திரையாய் அடியவர் பக்திக்ககமகிழும் அருள்வள்ளலாதலின், அச்சுதன் ஜெய முறநடித்துக்காட்டிய தன்றி உள்ளபடியே ஓடியதன்று. அவ்வாறு நடிக்காவிடில் விண்டு தன்னை நோக்கித் தவம் செய்தபொழுது மகுடாபிஷேகம் செய்துவித்தானைத் யெதிர்ப்பினுஞ் செயிக்கும்படி அளித்தவரம் அவலமாகும், அன்றியும் சிவப்பிரசாதமாகிய தனது வல்லமையைத் தற்செயலாகக் கருதி இருமாந்தவாணன் கண்ணனை

யெதிர்க்கநேராது: அதனால் அவன் தோள்கள் சங்கரிக்கப் படா தென்றே அப்பார் பட்டனர்.

பின்னர், திருமால் சிவபெருமானது கருணையை வியந்து நிற்கையில், வாணன் கடுங்கோபங்கொண்டு ஆரவாரித்து ஆயுதங்களைத் தாங்கிய அநேகமாகிய அவுணர்சேனையுடன் அமர் கோலங்கொண் டெதிர்க்க இருதிறத்தவருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இச்சமரில் கிருஷ்ணமூர்த்திக்குச் சிவானுக்கிரகமேலிட்டு வலிமிகுந்திருத்தலின் வாணன் புயங்களை ஒவ்வொன்றாகக் கண்டிக்கையில், நம்பெருமான், "நம்மையாசித்த இருகரங்களிருக்க" என, யாதவ சிரேஷ்டன், தானுவால் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் ஏனைய கரங்களை யிமைப்பிற் சங்கரித்தனன். பிறகு மாதுபாகன், வாணனை நோக்கி ஏ? வாணா? உன் தோளிலிருந்த தினவு நீங்கியதா?" என்று வினவ, வாணன்" கைலைபெருமானே அடியேன் அறியாமையால் அறைந்ததைப் பொறுத்தருளவேண்டும்" என வேண்டினன். உடனே அந்திவண்ணன் ஏ? வாணா உன்னை மன்னித்து இரக்ஷித்தோம் இப்பொழுது கண்ணனுடன் சமாதானம்பெற்று உன் மகளை அநிருத்தனுக்கு விவாகம் செய்வித்து துவாரகைக்கு அனுப்புக" என்று கட்டளையிட அவ்வாறே தன் மகள் உஷையை அநிருத்தனுக்கு மணம் புணர்த்திக் கண்ணபிரானோடு துவாரகாபுரிக்கு அனுப்பிவிட்டு, சிவப்பிரசாதத்தாற் பழையபடி ஆயிரம் கைகளும் அமையப்பெற்றுத் திருக்கைலாயகிரியிற், பார்வதி கொழுனனுக்குக்குடமுழாவாத்தியம் வாசிக்கும் பாக்கியம் பெற்றிருந்தனன் என்று சிவபுராணங்கள், விதந்தோதியதனால் இங்ஙனம் விரிவஞ்சி விடுத்தலன். சுபம்!

தி. பட்டுசாமி ஓதுவார்,
சந்நதி வீதி, திருவண்ணாமலை.

## சங்குபாலகன்.

(69ம் பக்கத் தொடர்ச்சி.)

### அத்தியாயம்-2.

### பிறப்பு.

ஒக்கமே மந்திரிகள் ஓடி வந்து வாளைப்பிடித்துக் கொண்டு "அரசே! வாழ்வின்பயனிருந்தால் போமோ? தாங்கள் இதற்காகப் பெண்கொலை புரியப் போகின்றீர்களே! இது நன்றன்று." எனக் கெஞ்சி தடுத்து விட்டனர். இச்சமயத்தில அவனுடைய மூத்த மனைவியர்கள், "நாயகா! இவளை மொட்டையடிப்பித்துக் கந்ததுணிகளைக் கட்டக்கொடுத்து வாசல் கூட்டும் பணிப்பெண்ணாக வெளியில் வைத்துக்கஞ்சியை வார்த்து அதைப்பருகும்படி செய்யவேண்டும்

அதுவே அவளுக்குச்சரியான தண்டனை” என்று கூறினர். இவ்வரசன் எப்பொழுதும் மூடத்தன்மை யுடையவனாதலாலும், ஒரு காரியத்தை முற்ற ஆராயாது செய்பவனாதலாலும், மெத்தமுனிவுடனிருந்ததனாலும் இதை யூன்றி உன்னிப்பாராமல் அச்சண்டாளிகள் கூறியவிதமே செய்யும்படி கட்டளையிட்டனன். மந்திரிகள் யாது கூறித்தடுத்தும் பயன்படாமற் போயிற்று கடைசியில் அவ்வாறே பணிப்பெண்ணாகி விட்டாள். வேடன் மகள். ஆயினும் அவள் எப்பொழுதும் இறைவனைத் தொழுதுங்கொண்டே நாளைப்போக்கி வந்தாள்.

இவள் இப்பரிதாபகரமான நிலையில் இருக்க இவள் பெற்ற இளங்குழந்தை எவ்வாறாயிற்றென்று பார்ப்போம்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

162437

## அத்தியாயம் 3.

### மூத்த தாயார்களின் சூழ்ச்சியிலிருந்து தப்புதல்.

எலிவளையிலகப்பட்ட குழந்தை பாலில்லாமல் கதறிக்கொண்டிருந்தது. அவ்வேளையில் அவ்வளையில் வாழ்ந்துவந்த பெருச்சாளி இக்குழந்தையைக் கண்டு அதனருகிற்சென்று கடவுள் செயலால் அதை ஒன்றும் செய்யாமலிருந்தது. இச்சமயத்தில் குழந்தை எலியின் முலைகளிற் பாலைப்பருகவாரம்பித்தது. அவனையன்றி அணுவும் அசையாதன்றோ? இறைவன் அருளால் குழந்தை எலியின் பாலையுண்டே அதனால் வளர்ந்து வந்ததெனில் மிகையாகுமா?

இவ்விதம் குழந்தை வளர்ந்துவர ஒரு நாள் அரசன் மனைவியர்கள் நீராடிவிட்டு அரண்மனை மேல் மாடியில் நின்றுக்கொண்டு மயிர் உலர்த்திக்கொண்டிருந்தனர். அப்பொழுது தாங்கள் வீசிவிட்டு வந்த குழந்தையின் நினைவுவந்து அதை எலிகொன்றிருக்கும் எனப் பேசிக்கொண்டிருக்க, பிள்ளையார் கோவிலுக்கருகில் பெருச்சாளியுடன் குழந்தை ஊர்ந்து வந்ததைக்கண்டனர்.

“ஆ! இதென்ன கொடுமை! நாம் எலிகொன்றிருக்கும் என்று நினைத்த குழந்தை இப்பொழுது ஊர்ந்து விளையாடிக்கொண்டிருக்கிறது! இதற்கென்னசெய்வோம்.” என எண்ணிக்கொண்டுப் பிறகு குழந்தையைக்கொல்ல வேறு உபாயம் நினைத்தார்கள். அதாவது அவர்களெல்லாரும் தலை நோவுகிறதெனப் படுத்துக் கொள்வதாயும் அரசன் வந்து கேட்டால் இத்தலைநோய்க்குப் பிள்ளையார் கோவிலுள்ள பெருச்சாளியின் இரத்தத்தைப் பொட்டிட்டால் தீருமென்று சொல்வதாயும், அப்பொழுது எலியைக் கொன்றபிறகு பிள்ளைக்கு பாதுகாப்பில்லாமல் அதுவும் இறந்து விடுமென்றும் எண்ணங்கொண்டனர்.

பின்னர் அவ்விதமே "மாயைத்தலைவலி வாயை வாயைத்திறக்கிறது" என்பதுபோல் தலைநோவுகிறதெனப் போய்ப் படுத்துக்கொண்டனர். அரசன் வந்து கேட்டதற்குப் பிள்ளையார் கோவில் பெருச்சாளியைக்கொன்று அதன் இரத்தத்தைப் பொட்டிட்டால் தீருமென்றனர். அரசன் தன் மூடத்தனம் விளங்கும்படி உடனே தன் மந்திரியிடம் சங்கதியைக் கூறிப் பெருச்சாளி இரத்தம் கொண்டு வருவிப்பாய் எனக்கட்டளையிட்டான். அவனும் ஆட்களை விட்டு அப்பெருச்சாளியைக் கொன்று இரத்தம் கொண்டுவரும்படி ஏவினான். அவர்கள் பிள்ளையார் கோவிலைநோக்கி அங்குச்செல்லலாயினர். இச்சங்கதியை எலி ஏதோ ஒருவிதமாக அறிந்துக்கொண்டு தீக்குழந்தையைக் கோவிலுக்குள்ளிருக்கும் சுவாமிக்குப் பின்புறத்தில் ஒளித்து விட்டது. அப்பொழுது எலிபிடிக்க வந்தவர்கள் இப்பெருச்சாளியைக்கண்டு அதைக் கொன்று அதன் இரத்தத்தைக் கொண்டு கொடுத்தனர். அதைப்போட்டவுடன் அரசன் மனைவியர்கள் தலைநோய் நின்றுவிட்டதென மகிழ்ந்திருந்தனர்.

இக்கள்ளிகள் இவ்விதமிருக்கப் பிள்ளையார் கோவில் விடப்பட்ட நம் குழந்தை பசியால் வாடி அழுதான். அது கண்ட விநாயகக்கடவுள் அவ்வழியே விதைவிதைப்பதற்காகக் கழனிக்குச் சென்றுக்கொண்டிருந்த உழவன் ஒருவனுக்கு வயிற்று நோயுண்டாக்கினார். நெடுநாளாக மழையில்லாது அன்றுதான் ஒருமழைபெய்திருந்ததால் அன்றே விதையை எப்படியும் ஈரம் காய்வதற்குள் விதைக்க வேண்டுமென்று வந்ததனாலும், வயிற்றுநோயதிகரிப்பதால் பொறுக்கமுடியாததாலும் அவ்வுழவன் "விநாயகக்கடவுளே! இப்பொழுது என் வயிற்று நோயைத்தீர்த்து விடுவீரானால் இன்று உமக்குப் பொங்கலிட்டுப் பலவித பழவர்க்கங்களுடன் படைக்கின்றேன்" என வேண்டினான். உடனே வலி தணிந்தது. மிக்க மகிழ்ச்சியுண்டானது உழவனுக்கு உடனே விதையைக் கொண்டுபோய்ச் சுருக்கில் தெளித்துவிட்டு வீட்டுக்குவந்து சுவாமிக்குப் படையலுக்குரிய எல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு விநாயகருக்குப் பொங்கல் முதலியதுடன் படைத்தான். அந்நாளையில் (இப்பொழுதுங்கூட. சிலர் இவ்விதம் செய்கின்றனர்.) சிலர் சுவாமிக்குப் படைத்தவுடன் சிறிது நேரம் கோவில் கதவை மூடிவிட்டு வெளியில்வந்து விடுவது வழக்கமாதலால் அவ்விதமே இவனும் செய்து விட்டு வெளியில் வந்து நின்றான், அப்பொழுது நம் குழந்தை பசியுடனிருந்ததால் அங்கு படையலிலிருந்தவற்றை உண்டு பசியாறியது. பின்பு உழவன் உள்ளே சென்று பார்த்தபொழுது படையலிலிருந்த வற்றைக் காணாதிருப்பதைக்கண்டு வியப்புற்று, ஒரு நாளும் அக்கோவிலில் இவ்விதம் நடப்பதில்லையாதலால், உடனே அரசனிடம் தெறிவிப்பதற்காக ஓடினான். அப்பொழுது அரசன் மனைவியர்களாகிய மூத்தாளனைவரும் இவன் வருவதைக் கண்டு என்னசங்கதியென வினவினர்.

அவன் நடந்தவற்றை யெல்லாம் ஒன்றுவிடாமல் கூறி அங்கு ஒரு குழந்தையின் அழுகைக்குரலும் கேட்டதாகக் கூறினன். தொடரும்.

அ. ச. அருணசலேச்வரர்.
சன்னிகிருப் சிங்காரவத்தை ருவான்வெல்ல, இலங்கை.

## ஸ்திரிகளுக்கானபகுதி

### " இல்லறதர்மம் "

உலகத்தில் மானிடராகப்பிறந்தோர் செய்யவேண்டிய முக்கிய அறங்களுள் இல்லறம் துறவறம் இவ்விரண்டே முக்கியமானது. இல்லறமென்பது:—

விழுப்பஞ்சான்ற வியத்தகு மில்லறம்
ஒழுக்க வியலறிவுறுத்திஞ் சாலைபாய்
நன்மை தழைத்து ஞபக்கொடை நிழற்றி
மென்மையரும்பி மேன்மை மலர்ந்தென
அன்பு காய்த்து நல்லருள் கனிந்தலகிலா
இன்பநறைபிலிற்று மினியகற்பகமாய்
இலகிடுமுண்மை மலையிலக்கன்றே ?
எத்துறுந் தகைய வில்லற மெனுமிம்
மாத்தடந்தேரினை வாழ்க்கையாம் போர்க்களஞ்
செலுத்து புதுன்பத்தீயரை யெறிந்து
தொலைத்திடலறியார் துறவு துறவென
நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து
மயக்கினும் மாழ்கலீர் ! மாந்தர்காள் !
உயக்கமின்றில்லற வொழுகலாறடைமினே.

என்றவாறு மஹாமேன்மை தங்கிய இவ்வில்லற தர்மத்தைக் கைவிடாது ஒழுகி அந்திய காலத்தில் இரண்டாவதான துறவறத்தைக் கைகொளல் வேண்டும்.

இல்லாளோடு மனமொத்து நடத்தும் கிரஹஸ்தாசிரமதர்மமே இல்லறமெனப்படும். இவ்வில்லறதர்மத்தில் முக்கியமானவள் இல்லாளே இவ்வில்லாள்:—

" கொண்ட தலைவனுக் கெண்டரும் போற்றி
நாடியொழுகியும் வாடிய போழ்தத்
துளங்குளிர் வசனங்களங்க மின்னுரைத்தும்
இன்னிசைபாடி மன்னியருகிருந்

N-B சூரிய நாராயண சாஸ்திரிகள் " தனிப்பாசுரத்தொகை.

தூக்கமுயர்த்தியுமுறசுவையுணவிடூஉ
ஆக்கமுறுத்து மவன் சொற்கேட்டுத்
தான்மகிழ்வுறூஉந்தேன் மொழியாட்டியாய்
இல்லறக்கலனை யியக்குமீகானாய்
இல்லிற்பதித்த முல்லை யங்கொடியாய்த்
துன்பவிருள் போக்கி யின்பவொளிசெய்யும்
நந்தா விளக்காய் சிந்தாமணியாய்
இறைவனளித்த வின்னுயிர்த்தலைவியாய்
இலகுருமனைவியே யிம்மையிவ்
வுலகினைத் துறக்கமாவுறச்செயுந்துணை யென

என்றவாறு பத்தாவுக்கேற்ற பத்தினியாய் புருஷன் காலாலிடும் வேலையைத் தலையாலே செய்து அப்புருஷனுக்கு உண்டி முதலிய உபகாரங்களுள் ஒன்றுங் குறைவில்லாமல் நடத்தி அவருக்குக் கீழ்ப் படிந்து இருக்கவேண்டும். இதை யொட்டியே:—

"தாசிபோல் பணியில் புத்தி தன்னிலே யமைச்சுபோலும், தேனிற்றிருவிழுட்டுஞ் சினேகத்திலன்னைபோலும், மாசிலாப் பொறைக்கும் பூமாதென்னவு மருவு நாளில், வேசிபோல் குணமிலாது மிகுந்த கற்பினுக்கு நன்றே" என்று முதியோர் புகன்றனர்.

ஒவ்வொரு பெண்டிரும்' யானைகட்டிவாழும் அப்பன் வீட்டை பார்க்கிலும் பூனைகட்டிவாழும் புருஷன் வீடேமேல்' என்ற பழ மொழியை மனதில் பதித்தொழுகவேண்டும்.

மங்கையரை பாலியத்தில் வளமொடு பிதாவே கார்ப்பான், பொங்கிய யௌவனத்திற் பொருந்து பர்த்தாவே காப்பான், தங்கிய மூப்பிலே தன்றனையனே காப்பானன்றிச்சங்கையாலெக்காலம் சுதந் தரமில்லைதானே" ஸ்திரீகள் விவாஹமாகும் வறையில் தன்தகப்ப னுக்கும் விவாஹமானபிறகு கணவனுக்கும் வயதானகாலத்தில் புத் திரனுக்கும் அடங்கினவர்கள். ஆதலால் அவர்களுக்கு ஒரு போ தும் சுதந்தரமென்பதே இல்லை.

'எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானம்' என்பதுபோல் சகல பாக்கியங்களிலும் ஸ்திரீகளுக்கு கற்பே பிரதானம். கற்பே விசே ஷித்த ஆபரணம்.

'சிறைகாக்குங் காப்பெவன் செய்யுமகளிர் நிறை காக்குங் காப்பே தலை'

என்றவாறு, ஸ்திரீகள் கற்பில் தங்களை காத்துக்கொள்ளுதலே மேலானதாகும்' மனக்காவலோ மன்னவன் காவலோ' என்பதற் கிணங்க பரிசுத்தமான மனத்தால் தன்கற்பு நிலைதவறாமல் தன்னை காத்துக்கொள்ளும் வைராக்கியமுடையவர்களா யிருக்கவேண்டும்.

கற்பென்பது யாது? என்றால்:—

"கற்பென்பது கலைகல்லாமையன்று; மற்
றிற் படிகடவா திருத்தலு மன்று;
தீயவழியினிற் செல்வழிக்கணவனை
யேயேயிஃதென வென்னுதிருந்து
வாயிலாப் பூச்சியாய் மண்ணுதலன்று
மாடுபோலுழைத்துக் கூடிவாழ்ந்து
காலந் தன்னைக் கழித்தலு மன்று;
கனவிசான்றயக் கலந்த தலைவன்
மனையற மாகூதியை மாண்புற வகுத்துக்
கற்பித்தலானது கற்பாம்; காதலன்
சொற்கடவா தவற்றாநெறிநிறீஇக்
கனவிலும்வேறு காளையர்தம்மை
நினையாதிருக்கும் நேர்மையே
யென்று கூறுமான்ற வான்றோரே'

"கற்பெனபடுவது சொற்றிறம் பாமை"

கற்பென்பது, கணவனே தெய்வமாகவும், அவர் சொல்லே வேதவாக்காகவும் கொண்டு அக்கணவன் சொல்தவறாமல் நடத்தலே யாம்.

(தொடரும்.)

சங்கரப்ப-ஸ்ரீனிவாஸ், ஒடையலூர்.

---

N-B. சூரிய நாராயண சாஸ்திரிகள்' தனிப்பாசுரத்தொகை,

# சிறுவர்க்கான பக்கங்கள்.

ஓர் தினம், ஒளவையார் என்னும் பாட்டி, தன் வீட்டிற்குப் பின்புறமிருந்த ஒரு தென்னந் தோப்புக்குச் சென்றார். அப்போது அவருடைய அண்டை வீட்டுக்காரன் மகன் குழந்தை வேலுவும் கூடவே போனான்,

தோப்பில் சில்லென்று குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது அப்போது குழந்தை வேலு பாட்டியைப் பார்த்து, "பாட்டி! எனக்கு ஒரு நல்ல கதை சொல்லுங்கள்," என்று கேட்டான். பாட்டியும் குழந்தைக்குத் திருப்தியாக ஒரு இனிமையான கதை கூறினர்

அவர் கதை சொல்லிக்கொண்டிருக்கும்போது, தோப்புக்கு டையோனும் ஆண்டு வந்தனன். அவனும், அவர் கூறிய கதையைக் கேட்டுக் களி கொண்டான். கதை கேட்டு முடிந்ததோ இல்லையோ உடனே அவன் அருகில் இருந்த ஒரு மரத்தின் மேல் ஏறி, நல்லவை ஆக, இரண்டு மூன்று இளநீர்கள் தள்ளினான். பிறகு கீழிறிங்கதும் அவைகளைச்சீவி, ஒன்று ஔவைபாருக்கும், ஒன்று குழந்தை வேலு வுக்கும் கொடுத்தான்.

இவைகளைப்பார்த்துக் கொண்டிருந்த பையன், உடனே ஆச் சர்யம் உற்று, "பாட்டி! இந்தகாய்க்குள் எப்படித் தண்ணீர் எய் திற்று? யார், இதை, இதில் வார்த்து வைத்தார்? எதன் வழியாய் ஊற்றினர்?" என வினவினன். அக்காலை ஔவையார், குழந் தாய்! வெயில்வேகம் அதிகம் ஆய் இருக்கிறது! உனக்குத் தாகம் அதிகமாயிருக்கும். இவ் விளநீரை முதலில் பருகு. பின்னர் நீ கேட்ட கேள்விகட்கும் பதில் பகர்கின்றேன்," என்று உரைத்தனர்.

பையனும் பருகி, "பாட்டீ! இவ்விளநீர் தித்திப்பாய் இருக் கிறது; இவ்வளவு உருசியான நீரை எவர், எதற்காக வார்த்தார்? தயவு செய்து, சிக்கிரம் சொல்லுங்கள!" என்றனன்.

அச்சமயம் ஔவையார், மட்டையோடும் இருந்த மற்றுமொரு காயைச்சேயின் கையில் ஈந்து, "இதில் கூட நீர் உளது. ஆட்டிப் பார்த்தால் தெரியும். இந்த நீர் எவ்வாறு ஊற்றப் பட்டிருக்கும்? கண்டு பிடி!" என்றனர். குழந்தை வேலுவினால் கூடாது இருந்த தைக் கண்ட கிழவியார் "பையனே! இதில் உள்ள நீர் ஒருவராலும் ஊற்றப்படவில்லை. இம்மரம் இந் நீரைத் தானாகவே வரவழைத்துக் கொண்டது. 'எப்படி? என்றால், கூறுகிறேன் கேள். இம்மரம் வளர்வதற்காகத் தண்ணீர் வார்த்திருப்பார்கள் அல்லவா? அப்படி ஊற்றப்பட்ட தண்ணீர் சுத்தமானதாகவாவது, அல்லது, சுத்தம் இல்லாததாகவாவது இருந்திருக்கும். இது எல்லாமரங்களைக் காட் டிலும் மேலானது. ஆகையினால், இது கங்காஜலத்திற்கும், கழிவு பட்ட நீருக்கும் வித்யாசம் கவனிப்பது இல்லை இது கங்காஜலம் ஊற்றினாலும் களிப்புறும். கழிவுபட்ட நீரை வார்ப்பினும் களிப்பு உறும்.

இவ்வளவு நற்குணங்களுக்கு இருப்பிடமான இம்மரம் தன் பாதத்தில் தண்ணீர் வார்க்கப்பட்ட விஷயத்தை மறந்து விடுவது இல்லை. மறக்காமல், காலில் ஊற்றப்பட்ட தண்ணீரைத்தலைக்குக் கொணர்ந்து, அதை இனிப்பானதாக மாற்றி, நமக்கு நல்கின்றது," என்று சொன்னார்.

இதனைக்கேட்ட குழவி, ஆமாம்! பாட்டி! தளராது வளர்ந்து வரும் இத்தெங்கு, நல்ல தெங்கு, இது ஒருவர் தனக்குச் செய்த

உபகாரத்தை மறப்பதே இல்லை. கூடிய சீக்கிரத்தில், வட்டியும் முதலுமாய்த் திருப்பிக் கொடுத்து விடுகிறது, என்று நவின்றது.

தெய்வம்போல் விளங்கிய குழந்தை குழந்தைவேலு, கூறிய தைக் கேட்டதும், சூரிய உதயம் மான, ஔவையார் உள்ளத்தில், ஒரு விஷயம் விளங்கிற்று. உடனே அவர் குழந்தைவேலுவைக் குறித்து. "குழந்தாய்! நீ சொல்லியபடி இத் தளரா வளர் தெங்கு நல்ல தெங்கே: ஏனெனில், இது தான் தாள் ஆல் உண்ட நீரை, இனியதாக மாற்றித் தலையாலே தருகின்றது. இத்தென்னைக்கு நன்றி (நல்லது-உபகாரம்) செய்வது போல், நல்லார் ஒருவருக்கு நன்றி செய்தக் கால், அந் நன்றியை, அவர்கள் என்று திரும்பவும் தருவார்கள்? என, சதா எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டாம். ஏனெனில், இத்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தருவது போல, அவர்களும், நாம் செய்ததைக் காட்டிலும் அதிகமான உதவியைச் செய்வார்கள், என்று தெரிந்துக்கொள்," என்றனர்.

இதனைச் செவிசாய்த்துக் கேட்டுக் கொண்டிருந்த, தோட்டக்காரனும், குழந்தைவேலுவும் களிப்பெய்தினர்கள். இனி, தக்கவர்கட்கு உதவி செய்வதாகத் தீர்மானித்து, அன்று தொட்டு, அம்மாதிரியே செய்து வந்தனர்.

ஔவையாரும், அப்போதே இவ்விஷயங்களை ஒரு செய்யுளாகக் கோர்த்து, அச்செய்யுளை அவ்விருவர் உட்பட எல்லாருக்கும் கற்றுக்கொடுத்தனர்.

இன்றும், அச்செய்யுளை நம்மவர் சொல்லிச் சந்தோஷமுறுவதை நாம் பார்த்து வருகின்றோம்.

இதுவே அச்செய்யுள்:—

நன்றி ஒருவருக்குச் செய்தக்காலந்நன்றி
'என்று தருங்கொ'லெனவேண்டா!—நின்று
தளரா-வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

லால்குடி, சே. கந்தசாமி, [தமிழ் ஆசிரியன்.]
முனிசிபல் ஹைஸ்கூல் குடியாத்தம்.


# மணவாழ்க்கையின் மர்மம்.

இதுவரையில் இப்மாதிரியான நூல் வெளிவந்ததில்லை. விலை அணா 8
இரஞ்சித போதினி ஆபீஸ், சவுகார்பேட்டை போஸ்டு, மதராஸ்

# திருச்செந்தில்வளர் சிவன் போற்றி பதிகம்.

(71 ம்பக்கத்தொடர்ச்சி.)

20. ஏனையா வென்மீது மோடி வேண்டாம்
ஏழையல்லோ ? பாலனல்லோ ? ஏழை பங்கா !
நானையா வுன் றனிரு பதமே போற்றி
நாயனும் வாவென்றழைத்தால் நாயேன் முன்னே
தானையா முன்தோன்றி யருள்புரிந்து
தற்காத்து ரெட்சி வள்ளித்தாயாள் தந்த
தேனையாவுண்ட கனிவாயா ! வா ! வா !
சிவ சிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

21. நலங்கள் பெற ஆறெழுத்துப் பொருளுங்காட்டி,
நடுவினின்ற முதலெழுத்துப் பொருளுங்காட்டி,
துலங்கு ரெண்டு வீதி வாசல் நாலுங்காட்டி,
சூழ்ந்த நவவீரர்கள் சொரூபங்காட்டி,
இலங்கு வள்ளித் தெய்வானை மயில் வேல் சேவல்
எந்திய பொற் கரங்களும், ஷண்முகமும் காட்டி
சிலம்பு பதம் தனைக்காட்டு ஐயா ! வா ! வா !
சிவ சிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

22. அன்பருள மேவு நாயகனே வா ! வா !
அரஹர-ஆறுமுக மூர்த்தி வா ! வா !
உம்பர்குடி வாழவந்த ஐயா வா ! வா !
ஓம் நமசிவாய குரு நாதா வா ! வா !
எம்பெருமானென் சாமி நாதா வா ! வா !
எங்கோவே ! எனையாளு நாதா வா ! வா !
தென் பொதிகை நகர் வாழுமையா வா ! வா !
சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி !!

23. அறியாத புலனோடை நானென்றாலும்
அப்பனே ! யுன்பதத்தை மறப்பதில்லை,
வெறியான பேர்பணத்தைத்திருத்தி நன்றாய்
மென்மேலும் கருணை யுன்கிருபை கூர்ந்து
பிரியாமலிருக்க வென்று அருள் புரிந்து,
பெருமையுனுருமை நல்கிப் பெருமை நல்கி,
சிறியேனைக் காத்தருளு ஐயா வா ! வா !
சிவ சிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

24. காரிலங்கு கூந்தல் மின்னார் மோகம் ஓட்டி,
காண் கயிலை சுகப்காட்டிக் கருணைகூர்ந்து,
நேரிலங்குந் தமிழ் காட்டி, ஞானம் காட்டி,
நினைவிலுனைப் பிரியாமலருளுங் காட்டி,

தாரிலங்கு திருமார்பும், தோளுங்காட்டி,
ஷண்முகமும், பன்னிருகை தோளுங்காட்டி
சீரிலங்கு பதங்காட்டு மையா வா ! வா !
சிவ சிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

25. கயல் காட்டு விழிமாதர் மோகம் தேட்டி,
கல்வியின்ப சுகங்காட்டிக் கருணை கூர்ந்து,
மயல் ஒட்டி யுன்றனிருபதமும் காட்டி,
மனதிலொன்றும் பிரியாமலருளுங்கூட்டி,
அயல் காட்டு செஞ்சேவல் கொடியுங்காட்டி
ஆறு முகந்தனைக் காட்டி யஞ்சேலென்று
செயல் காட்டி, யென்னையாளுமையா வா ! வா !
சிவசிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

26. ஆசை யெனும் பேரின்பப் பொருளுங்காட்டி
அஞ்செழுத்தின் ஆறெழுத்தின் கருணைகாட்டி,
பூசை செய்யும் விதிப்படி கைமுறையுங்காட்டி,
பூரணமா மெஞ்ஞானம் புகழுங்காட்டி,
மாசில்லாப் பரஞ்சோதி மணிபோலென்றன்
மனதிலொன்றும் பிரியாமலருளுங்காட்டி,
தேசிகனே யென்னையாளுமையா வா ! வா !
சிவ சிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

27. உருத்தி யென்னை யாளாக்கித் தமிழை நித்தம்
ஓதுதற்கு மிசைகாட்டி, யொள் ளொளிக்குள்
பொருத்தி, ஐந்து புலன்களையும் ஒன்றாய்க்கூட்டி,
பூரணமா மெஞ்ஞானப் புகழுங்காட்டி,
கருத்தினின்று பிரியாமலருளுங்காட்டி,
கல்வியின்பசுகங்காட்டிக் கருணை கூர்ந்து,
திருத்தியென்னை யாட்கொண்ட ஐயா வா ! வா !
சிவ சிவா ! செந்தில்வளர் சிவனே போற்றி !!

சுபம் ! சுபம் !! சுபம் !!!

லால்குடி, சே. கந்தசாமி.

## முயற்சி.

நாம் ஒரு காரியத்தைச் சித்திபெறச் செய்யவேண்டுமானால் அது முடியுங்காறும் விடாது முயலவேண்டும், அதற்குயிடையில் எதிர் பாராத கஷ்ட நஷ்டங்கள் எவ்வளவு நேர்ந்தாலும்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார் செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்.

என்றபடி எதற்கும் சிறிதும் மனஞ்சலியாமல் பொறுமையுடன் அதனை செய்து முடித்தல் வேண்டும். நல்லொழுக்கத்தில் நின்று முயற்சிசெய்வதே தகுதியானது. நன் முயற்சி சகல சம்பத்திற்கும் காரணமாதலின் அதை உறுதியாகக் கைக்கொள்ள வேண்டும். பண்டைய காலத்து நூலாசிரியர் முயர்ச்சியினலன்றோ பல்லோர்க்கும் பயன்படத்தக்க பல அரிய பெரிய நூல்களையியற்றியுள்ளார்.

சிலர் இரண்டொரு தடவை ஒரு காரியத்தைப்பற்றி முயற்சி செய்து அக்காரியங்கைகூடாவிடின் மனஞ்சலித்துவிட்டு விடுகின்றனர் அது தவறு. இரண்டொருதடவை முயன்று கைகூடாவிடினும் மீண்டும் அக்காரியம் சித்தி பெறும்வரையில் விடாமுயற்சி செய்ய வேண்டும். அப்படிச் செய்யின் அக்காரியம் கைகூடுவது நிச்சயம் முயற்சியினல் ஆகாதகாரியம் ஒன்றுமில்லை. இது பற்றியே நம் மூதாட்டியராகிய ஒளவைபிராட்டியார், முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் எனவும் ஊக்கமது கைவிடேல் எனவும் கூறினர். இடையில் நேரும் இடையூறுகளுக்கு அஞ்சி மனதை தளர விட்டவர்கள் தாம் தொடுத்த கருமத்தை ஒருபோதும் செய்து முடிக்கமாட்டார்கள்.

ஒவ்வொருவருக்கும் காரியத்தைக் கைகுடுத்தலில் சோம்பலைப் போன்ற பகை வேறேதுவுமில்லை ஆதலின் அச்சோம்பலை ஊக்கமென்னும் தடிகொண்டடித்து ஓட்டி நாம் மேற்கொண்ட கருமத்தை முற்றுப்பெறல் செய்தல்வேண்டும் இதற்கு மாருகச்சிலர் மனத்திடமின்றி கருமங்களை சரிவர நிறவேற்றுமல் தங்களுக்கும் பிறர்க்கும் யாதொரும் பயனுமில்லையாக அக்காரியத்தை அறைகுறையாகவிட்டதினல் அவமானமுமடைந்து வாளாக்கிடந்து மயங்குகின்றனர். மற்றும் சிலர் எல்லாம் விதிப்பயன் யென்றும் அதிர்ஷ்டமிருப்பின் எல்லாம் தானே வருமென்றும் வீணன பின்னடையும் யோசனைகளை செய்து தெய்வத்தாலாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்த கூலி தரும் என்னும் உண்மையையறியாமல் முயற்சியைக்கைவிட்டு சோம்பலுற்று, வருமையடைந்து வருந்துகின்றனர். அந்தோ ! இவர்கள் அறியாமை இருந்தவாறென்னே, இவர்கள் விதியை மதியால் வெல்லலாமென்பதைசிறிதும் அறியார்கள் போலும் விதியை மதியால் வென்ற மார்க்கண்டேயரைப்பற்றி குமர குரு பர சுவாமிகளும் தாம், திருவாய்மலர்ந் தருளிய நீதி நெரி விளக்கத்தில்

உளையா முயற்சி களைகணவுழின்
வலிசிந்தும் வண்மையுமுண்டோ-உலகரியப்
பான்முளை தின்றுமறலியுயிர்குடித்த
கான்முளையே போலுங்கரி

என்று செய்யுள்ளாரே மார்க்கண்டேயமுனிவர் யமனைவென்று என்ஞான்றும் பதினறுவயதினராயிருந்தும்பாகியத்தைப்பெற்றதற்கு

காரணம் அவரது விடாமுயற்சியன்றோ, அமரர்களாலும் அடைய முடியாத பெறும்பேற்றைத் துருவன் என்னும் சிறுவன் அடைந்தது எதனாலெனில் அவனது விடாமுயற்சியினாலன்றோ? இடையில் இவர்கட்கு நேர்ந்த துன்பங்கள் எவ்வளவு. அவற்றிற்கெல்லாம் இவர்கள் சிறிதும் அஞ்சினார்களோ? அஞ்சித் தங்கள் முயற்சியைக் கைவிடின் அவர்கள் அப்பயனை அடைந்திருப்பார்களோ? ஒருபோதும் அடைந்திருக்கமாட்டார்கள். ஆதலின் மக்களாக பிறந்த நாம் ஒவ்வொருவரும் நல்வழியில் நின்று இடையூறுகளெவற்றிற்கும் அஞ்சாமல் விடாது முயன்று எடுத்தகருமத்தை இனிது முடித்துப் பயன்பெறுவார்களாக.

மேலும், நமது ரஞ்சிதபோதினிப்பத்திராதிபர் அவர்கள் ரஞ்சித போதினிக்கு சந்தாநேயர்களின் தொகை மிகக்குறைவாயிருந்தும் எப்படிக்கேனும் அதனை அபிவிர்த்தியடையச் செய்யவேண்டுமென்று ஊக்கங்கொண்டு உழைத்துவருவார்களென்று நம்புகிறேன். தமிழபிமானிகளாயுள்ள ஒவ்வொருவரும் தாங்கள் சந்தாநேயர்களாய் இருப்பதுமன்றி தங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாய் சேர்த்துத்தந்து நமது ரஞ்சிதபோதினியை இனிதுவாழ முயற்சி செய்யும்படி வேண்டுகின்றேன். சுபம். ப. மு. ச. கருப்பஞ்செட்டியார்.

கீழச்சிவல்பட்டி.

# இரத்தினம்பாள்

அல்லது

# தற்கொலை புரியத்துணிந்த தையல்.

## அத்தியாயம் 1.

### சதி பதிகளின் சந்திப்பு.

கடைசியாகத் தங்களுடைய விருப்பந்தானென்ன? நமது மகள் இரத்தினம்பாளை யாருக்குமணம்செய்ய நினைத்திருக்கிறீர்கள் என்று தன்கனவனுகிய இரத்தினசாமி நாயுடுவை நோக்கி பார்வதியம்மாள் கேட்டாள்.

இ.நாயுடு:- பெண்ணே! என்னுடைய இஷ்டத்தைக்கேட்க ஆவலுற்றபடியால் இதோ சொல்லுகிறேன் சற்றுகவனமாய்க்கேள். எனது தங்கையின் குமாரன் இராமனாத நாயுடு இருக்கிறாரல்லவா? அவர் மிகவும் உத்தமகுண நன்னடக்கை யுடையவராகையால் அவருக்கே நமது மகளை திருமங்கிலியம் சூட்டி என்கண்குளிரப் பார்க்கவேண்டுமென்பதே என்கருத்து.

பார்வதி:- என்ன சொன்னீர்கள் யாதாமொரு காரியத்தைப்பற்றி கேட்டால் தங்களுடைய வளக்கமே இப்படிதான் சொல்லுகி றது-சபாஷ் நல்ல யோசனை இருமநாதன் ஓர் பரம ஏழைகுந்தி இருக்கவும் ஓர் உயர்ந்த குச்சு இல்லாதவன், அவனுக்கா?பெண் கொடுப்பது சற்றுயோசித்துச்சொல்லுங்கள் என்னுடைய தம்பி யின் குமாரன் இருஜுவைபற்றி தங்களுடைய தாத்பரிய மென்ன அவனென்ன ? தங்களுடைய மருமகனைப்போல் ஏழையா ? நஞ்சை பிஞ்சையில்குறைவா? அவனுக்கு நிகர் இந்த சமஸ்தான திலும் ஓர் பிறபுகிடையாதென்றே நான் உருதியாக சொல்லு வேண், அப்படி யிருக்க அவனே விலக்கிவிட்டு இந்த ஏழைக்கு தான் கொடுப்பேனென்று கூறியதும் வியக்கத்தக்கதே ?

இ-நா. பெண்ணே உன்னுடைய பேதமைக்குணத்தால் இருமநாதனே இழிவாகவும் ருஜுவை மேலாகவும் பேசிவிட்டாய். இருமநா தன் ஏழையென்பது மெய்தான் அவன் குடும்பங்களைப் பாது காத்துக்கொள்ள அவனுக்கு தற்சமயம் இருக்கிற ஆஸ்தியே போதுமானது. அதுவும் தவிற கல்வியிலும் இங்லீஷ் தமிழ் தெலுங்கு முதலிய மூன்று பாஷைகளிலும் பூரண பாண்டியத் யம் பெற்றிருக்கிறுன் பேச்சை நெடுகவளர்ப்பானேன் என்னு டைய தங்கையின் குமாரன் ருமநாதனுக்குதான் திருமணஞ் சூட்டவேண்டும் முதலாவது நமது குழந்தையின் விருப்பத்தை அறிந்துதான் செய்யவேண்டும் விருப்பமில்லாவிவாகம் விபத் துக்கு வழியாகும் பெண்ணே இதைப்பற்றி நமது குமாரத்தி யின் விருப்பமுணர்ந்து, மறுபடியும் பேசுவோம்.

## அத்தியாயம் 2.

### மணவாளன் வருதலும் வீட்டில் கலக்கமும்.

நேயர்களே ! நாம் கதையைத்துவங்குமுன் மேற்கூறியவர்களின் வறலாற்றை சற்று விவரித்து கதையை துவக்குவோம்-இலங்கையில் மத்தியபாகமாகிய கண்டி பெரியகுளத்துக் கருகாமையிலுள்ள ஓர் வீட்டில் இவர்கள் வசித்திருக்கிறுர்கள் அந்த வீட்டு முகப்பில் இரத் தினவிலாசமென்று பெரிய எழுத்தில் எழுதியிருக்கின்றன, அவ ருக்கு இரத்தினம்பாளென்ற ஓர் பெண்குழந்தையும் ரகுபதி என்ற ஓர் ஆண்குழந்தையும் ஆக இரண்டு குழந்தைகளுண்டா யிருந்தனர் அவர்களில் மூத்தபிள்ளையாகிய ரகுபதிக்கு சுமார் 18 வயதிருக்க லாம் இளைய பிள்ளையாகிய இரத்தினம்பாளுக்கு சுமார் 14 வய திருக்கலாம்.

(தொடரும்),

R. S. Joseph,

## இனியவைகூறல்

மனத்திலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வெளிப்படுத்துவனவான இனிய சொற்களைச் சொல்லுதல் இனியவை கூறல் என்பது. இதுவும் விருந்தினரை யுபசரித்தற்கு முக்கியமான கொள்கையாகும்; இதுபற்றியே விநாயக புராணத்தில்,

"வந்து விருந்து மலராத வதன நோக்குமுன் குழையும்
அந்தவடைவாலகத்தன்மையைமலர்ந்தமுகத்தால் வெளிப்படுத்திச்,
சந்தமணி வாயினுந்தோன்றச்சற்றும் வஞ்சம் கலவாமே
உந்துஞ் சுவையின் மொழியென்று முரைத்தல் வேண்டும் பயன்
வேண்டின்" கச்சியப்ப முனிவர்.)

வந்த விருந்தாளிகள் மலர்ச்சியில்லாத முகத்தைப் பார்க்குமுன்னே வாடுவர். அக்காரணத்தால் இம்மைப் பயன்களையடைய விரும்பினுல் மனதிலுள்ள அன்பை மலர்ந்த முகத்தினுல் வெளியிட்டு அழகிய ஆபரணம் வாயிலும் விளங்கும்படி சிறிதும் வஞ்சனை கலவாமலே மிக்க உருசியுடைய இனிய சொற்களை எப்பொழுதும் சொல்லுதல் வேண்டும். நன்னெறி.

"இன்சொலாலன்றியிருநீர் வியனுலகம்
வன்சொலாலன்று மகிழாதே-பொன்செய்
அதிர்வளையாய் பொங்காதளர் கதிராற்றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங்கடல்" (சிவப்பிரகாச சுவாமிகள்)

பொன்னினுர் செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களை யணிந்தவளே, பெரிய கடல் நீரிற் சூழப்பட்ட பெரிய உலகத்திலுள்ளவர் எப்பொழுதும் இன் சொல்லினுல் (மகிழ்வாரே) அல்லாமல் கடுஞ்சொல்லினுல் மகிழமாட்டாரன்றோ? (எது போலெனின்) கடலானது உஷ்ணமான கிரணங்களையுடைய சூரியனது வருகையால் பொங்காது குளிர்ந்த சந்திரனது வருகையால் பொங்கும்.

நீதிநெறி விளக்கம்.

"இனியவரென் சொலினுமின் சொல்லே யின்னுர்
கனியுமொழியுங்கடுவே—அனல் கொழுந்தும்,
வெங்காரம்வெப்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கிக்குளிர்ந்துங் கொலும்" (குமரகுருபர சுவாமிகள்).

அன்புடையவர் யாது சொன்னுலும் அது இனிய சொல்லேயாம் அன்பில்லாதவர் சொல்லுகின்ற செவிக்கு இனிய சொல்லும் கடுமையுடையதேயாம். (இவை எவை போலவெனின்) நெருப்புப்பால் எரிகின்ற வெங்காரம் கடுமை செய்வதா யிருந்தாலும் வியாதியைப் போக்கும்! விஷம் உடம்பு சிலிர்க்கும்படி குளிர்ச்சியையுடையதாயிருந்தாலும் விரைவில் கொன்றுவிடும்,

"துன்புறா உந்துவ்வாமையில்லாகும் யார்மாட்டும்
இன்புறா உமின் சொல்வர்க்கு" (திருக்குறள்)1

எல்லாரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இனிய சொற்களையுடையவர்களுக்கு, துன்பததை மிகுவிக்கும் வறுமையானது இல்லையாம்.

"அல்லவை தேயவறம் பெருகு நல்லவை
நாடி இனிய சொலின்" குறள (2).

பொருளாற் பிறர்க்கு நன்மை தரும் சொற்களை மனத்தால் ஆராய்ந்து, கேட்பதற்கு இனியனவாக ஒருவன் சொல்வனுபின் அவனுக்கு பாவங்கள் குறைய தருமம் செழிக்கும்.

"சிறுமையுணீங்கிய வின் சொல் மறுமையும்
இம்மையு இன்பத்தரும்" குறள் (3)

பொருளார் பிறர்க்கு வருத்தம்தருதலில்லாத இனிய சொல் ஒருவனுக்கு மறுமையிலும் இம்மையிலும் இன்பத்தைக் கொடுக்கும்

நாம் இனிதாகப்பேசுவதினுல் பிறரிடத்தினின்றும் பொருள் சம்பாதித்துக் கொள்ளலாம் தர்மமானது இன்சொலினிடத்துள்ளது, நாம் இன் சொலின் மூலமாய் தர்மத்தை கைப்பற்றுகிறோம். நாம் இனிய மொழிகளை எப்பொழுதும் பேசுவதினுல் பெரியவர்களுடைய சிநேகம் பெற்றுக்கொள்ளலாம் இனிதாகப்பேசுவதில் கெர்வம் என்பது சிறிதும் கவரக்கூடாது அப்படிச்சலந்திருந்தால் அவன் துன்பத்திற்காளாவான், இதைப்பற்றிய ஒரு சிறுகதை;

முன்னொருகாலத்தில் இராவணன் பரமசிவன்மேல் கோபம் கொண்டு கைலேயங்கிரியைத் தன்னுடைய வாச ஸ்தானத்திற்கு கொண்டுபோக நினைத்து மறுநாள்தான்வந்து மலையை தனது தலையால் தூக்கினுன்-தன்னுல் கூடிய மட்டும் தூக்கிப்பார்த்தும் அசைக்க முடியவில்லை அப்பொழுது சிவன் தனது கடைக்கண்ணுல் ராவணன் மலையை தூக்குவதைப்பார்த்து, தன்னுடைய கட்டை விரலால் ராவணன் தூக்கிக்கொண்டிருக்கும் இடத்தில் அழுத்தினுர் அப்பொழுது ராவணன் வேதனை பொருக்க மாட்டாமல் கதரிக்கொண்டு தான் செய்த குற்றத்தை மன்னிக்கும் பொருட்டு சிவன்மேல் இனியமொழிகள் அடங்கிய சிலபாடல்களைப் பாடினுன். அந்த இனியபாடல்களை சிவன் அருகாமையிலுள்ள பார்வதிதேவிகேட்டு தான் இராவணன்பாடிய பாடல்களுக்கிரங்கி அவனை நீங்கினின்று விடுவித்தாள். இதனுல் நாம் கடவுளை நம்மிடத்திலுள்ள இனியவார்த்தைகளால் நம் வசப்படுத்திக் கொள்ளலாம்

ஆதலால் நாம் இனிமேலாகிலும் ஒவ்வொருவரிடமும் இனிய மொழியை பேசிவர முயல்வோமாக.

தமிழபிமானி.

K. சாமிநுதன், எட்டையாபுரம்.

# மிருகாவதி.

78 ம் பக்கத் தொடர்ச்சி.

இங்குறும் ஆண் பெண் பாலராய் விட்டார்கள் தங்கள் சிருங்கார ரஸத்தை யனுபவிக்கும் பொருட்டாய் லதாகிரகங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாயும் நினைத்தல் தகும். இதோபாருங்கள், இந்த கொடிவீட்டில் விதம் விதமான ஆஸனங்கள் போடப்பட்டிருக்கின்றன. இதோ பாருங்கள், மற்றொரு இந்தக்கொடிவீட்டில் விதம் விதமான கட்டில் மெத்தை தழுவணைகளும் போடப்பட்டிருக்கின்றனவே !

ரூபாவதி ! அடியே கமலா ! யாரார் மனோதரும்ம் எப்படி யெப்படியோ அப்படியப்படியெல்லாம் மனோராஜ்யஞ் செய்யலாம்; இந்த உபவனமோ இன்னாருடைய தெனத் தெரிந்தபாடில்லை. பன்னீர் மரங்களும் தென்னை, கமுகு பிலா செவ்வாழை முதலான சமஸ்தான விருக்ஷஜாதிகளும் பயிரிடப் பட்டிருக்கும் விந்தையைப் பார்த்துக் களிப்பெய்துவோம்! இவைகள் ருது பேதமில்லாமல் பலன்களைக் கொடுக்கக் கூடியனவாய்க் காணப்படுகின்றனவே ! இதற்குடையவர் நம்மை ஆக்கினை பண்ணுவார்களேல் நாம் அவலைப்பெண்கள் என்ன செய்யலாகும் !

மிருகாவதி: என் இன்னுயிர்க்கண்மணிகாள் ! கவலை சிறிதும் வேண்டாம். நாம் தெய்வகதியாயிவண் உற்றனம். ஒரு ஆக்கினையும் நம்மிடமணுகாது, இங்குள்ள திவ்வியமான புஷ்பங்களை கொய்து இந்தசெந்தாமரைப் பொய்கையில் நீராடுவோம். இங்கேயே அம்பாளைஸ்துதித்துப் போற்றுதல் செய்வோம். பிறகு வருவது வரட்டும்; வரவேண்டியதைத் தடுக்க நம்மாலுமாகாது பின்னை வராமலுமாகாது. எவற்றிற்கும் அஞ்சாதீர்கள், தோழியர்காள் ! நம்முடைய நந்தனவனத்திலமைக்கப்பட்டிருக்கிற நேர்த்தியான நடபாவிகளைக் காட்டிலும் அழகுள்ள இந்ததாமரைத் தடாகத்தைப் பாருங்கள் அடிகண்மணிகாள் ! பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை' என்பார்கள். இலட்சுமி தேவியார் வசிப்பதும், வாணி குடியிருப்பதும், நான்முகன் குடிகொண்டிருப்பதும் இந்தத்தாமறைமலரிலேதான். மதனன் கணைகளுளொன்றுவது இஃதேயாம். அல்லாமலும் விஷ்ணுவின் உந்தி கண்கள், கையினிற் படை யாவும் இந்த செந்தாமரையே ஜீவராசிகட்கெல்லாம் உயிர் நிலையாயிருப்பதுவுமிந்த கமலமேதான். உபமான உபமேயங்கட்கு கவிகள் இந்த மலரையே சிறப்பித்தெடுத்துக் கொள்ளுகின்றனர். பொய்கைகள் பொலிவுறுதலும் தாமரை மலரால் தான் மாதர் மணிகளின் கண்கள், கரங்கள், தாள்கள் எல்லாம் இம்மலருக்குவமையானவை. சூரியனைத் தாமறை நண்பனென புகல்வதுண்டு. ஏனெனில் தாமறை காலையில் அலர்ந்து மாலையில் கூம்புதலால்—பிரமரங்கட்கு இப்மலர் மதுக்குடமாம், அன்னங்கட்கோ தங்குமிடமாம். இம்மலரில் சிறந்த * முத்துக்கள் பிறக்கும் இதற்கடுத்தபடியாக முல்லைமலரையே கூறுதல் தகும்.

கபலாட்சி: எல்லாவிதத்திலும் இந்த உபவனஞ் சிறந்ததே. கண்காட்சிக்குகந்ததே! மந்த மாருதமுஞ் சில்லென வீசுகின்றது. பூவுங்கொய்தாயிற்று நீராடுவோம் வாரீர்.

மிருகாவதி: தோழிகாள்! இதோ பாருங்கள் குமுதம், குவளை, காந்தள், கோங்கு, சண்பகம், செவ்வந்தி, கடம்பு, புன்னை, கொன்ற மலர்களுமிருக்கின்றனவே! இவைகளையுங் கொய்துவிட்டுப் பிறகு நீராடி பரமேசுவரியைப் பூஜிப்போமாக" என்றுள்.

இவ்வாறு இந்த நான்கு நாரீமணிகளுஞ்சேர்ந்து அங்கு மிங்கு முலாவிக்கொண்டிருந்தபடியே மனவுறுதி கொண்டவர்களாய்: எந்த விஷயத்திலும் கவலைகிலேசமுமில்லாதவர்களாய் வருவென வெல்லாம் வந்தே யாகுமென்ற மன திருடங் கொண்டவர்களாய் பூக்கொய்து கொண்டிருக்குங்கால், ஆங்கு சற்றுதூரத்தில் இரண்டு பூமான்களின் தோற்றமும், அன்னவர்களின் இனிய மொழியுங் கண்டு வியப்புறலாயினர். மங்கையர்கள் அந்த பூமான்களைக்கண்டு, அவர்களை சிறந்த பெருந்தன்மை வாய்ந்தவர்களாக மதிக்க மிருகாவதி தன் மூன்று சகிமார்களையும் நோக்கி, சற்றே இந்தப் பூமான்களை நெருங்கி, அவர்கட்குத்தெரியாமல் அவர்கள் வார்த்தைகளைக் கேட்க விருப்பங் கொண்டு, ஒரு அசோக மரத்தைக் கூடாரமாய்க்கொண்டதோர் லதா கிரகத்தில் புக்கி, மறைந்து இருந்து கேட்கவேண்டுமென பணிந்தவாறு எல்லாரும், அவள் விரும்பியபடி செய்யலாயினர்.

---

* "தந்திவராகமருப் பிப்பி பூகம் தழைகதலி
நந்து சஞ்சலம் மீன்றலை கொக்கு நளினம் மின்னர்
கந்தரம் சாலி கழை கன்னல் ஆவின் பல் கட்செவிகார்
இந்து உடும்புகரா, முத்தம் ஈறம் இருபதுமே" (தொடரும்).

துறையூர், மா. சுப்பராமய்யா.

# சுலோசனை

[79 ம் பக்கத் தொடர்ச்சி.]

இரண்டாவது காட்சி.

இடம்: நவமணிமண்டபம்.

[ராவணேஸ்வரனும் மண்டோதரியும் பிரவேசம்].

காலம் விடியற் காலம்.

மண்: பிராண நாத! லங்கேஸ்வர! சர்ம பூமியாமிப்பூவுலகின் கண் எத்தகைய சிறப்பினரும் ஈசவரன்' என்ற மிகவும் அரியதான பட்டப்பெயரைப்பெற்றவர்களைக் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை, இத்தகைய சிறப்புவாய்ந்த பதவி தங்கட்கு கிடைத்திருந்தும்

கேவலமிழிவைத்தரும் பெண்ணாசையை விடுக்காமல், விண்ணவருந் தகைக்கொணாத இந்த லங்கா ராஜ்யம் வேரற்றமரம்போல் பூண்டற்றழியும் காலம் வந்ததே! நேற்றுகாலையில் குழந்தை மேகநாதனை போர்புரிய போக விடுத்தீர்கள்; நான் மறுத்துச் சொல்லுவதற்கில்லாமற்றிகைத்தேன்; எல்லாரும் எமனுலகு சென்று எஞ்சிய மேகநாதனையும் எனக்காகாதென்றெண்ணிப் போகப்பணித்தீர்கள் போனும் உயிர் பிழைத்தாகிலும் வருவானோ! அவன் மகா சூரனே, விண்ணவரையே வென்ற தீரனே; ஆயினும், இச்சமரினில் மீண்டு வந்தவர்களே யில்லையாதலால், சங்கை மேற்கொண்டு இவ்விதம் வருந்தலாயினேன். இவ்விலங்கையில் சீதையைக் கண்டது முதல் அனர்த்தங்களே வளர்ந்து தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. இவ்வளவிற்கும் அவள் மேலுற்ற துராசை [கடிந்து] நிராசையான பாடில்லை. இது தகுமா, தருமமாகுமா? அடையத்தகாதவளும், மனதினால் ஸ்மரிக்கவுங் கூடாத வருமான தேவமங்கை யொருத்திக்காக சர்வ ஸ்வத்தையுமிழந்து, பிரதாபலங்கேஸ்வரன் என்ற பேருங்கீர்த்தியுமற்று, தங்களுக்குப் பணிவிடைகள் சமயமறிந்து விருப்பத்தின்படி நினைத்த மாத்திரத்தில் செய்துக்கொண்டிருந்த விண்ணவரே ககனமார்க்கத்திலிருந்தபடி கைகொட்டி நகைக்கலாயிற்றே! ஐயோ! [பரிதாபம்]

ராவ: ஏனிவ்வாறு தாறுமாருய்ப் பிதற்றுகின்றனை? பிராணசகி! நின் சுதன் பராக்கிரமத்தை நன்காராய்ச்சி செய்திருந்தால், நீ இங்ஙனம் மனங்கசிந்து மொழிய வரமாட்டுவாயில்லை. இதோ பார், இன்னும் ஒரு நொடிப்பொழுதில் ஜயப்பிரதாபசாலியாய் நம்மரும் புதல்வன் வரப்போகின்றனன்!

மண்: இந்தப்பெருமை இனி வேண்டாமே! சீதை வந்தநாளே தங்களுடைய அருமை பெருமையெல்லா மொழிந்தனவே!

ராவ: நாரீமணி! வருந்தற்க, மாண்டவர்கள் போக மீள்பவர்கட்கு இனி குறையில்லை. மாயாவித்தைகளிற் சிறந்தவனும், பலபராக்கிரமசாலியும், அளகாபுரி மன்னனை வென்றவனுமான, இந்திரஜித்தேயன்றோ இப்பொழுது போர் செய்து கொண்டிருக்கின்றான்! கவலையேன்!

மண்: நான் அறிந்தமட்டில், பிராணநாயகா! இந்த யுத்தத்தில் வீராதி வீரன் பிரகஸ்தன் மாய்ந்தனன்; சூராதி சூரனான நிகும்பன் நிரியாணமாயினன்; தங்கள் தம்பி கும்பகர்னன் மகாபலவான் இருந்த விடமே தெரியாமல் புல் முளைத்தும் போய்விட்டது. அக்னிகேது ரச்மிகேது, வஜ்ரதம்ஷ்டிரன், அகம்பனன், தேவாந்தகன், நராந்தகன் முதலாயினோரும் தென்றிசை சென்றனர்: மாயாவி வித்யுஜிஹ்வன் வீழ்ந்தனன் (பெருமூச்செரிந்து—கண்ணீர் சொரிந்து) ஐயோ! இந்த குப்தமான இடத்தை கடல்தாண்டி வந்திருக்கும் எதிரிகளின்

வீரச்செய்கைகளை யோசித்து பார்க்குமிடத்து அவர்கள் நம்மை வெல்லுவார்கள் என்றே மதிக்கத்தக்கதாகும். [தொடரும்.]

துரையூர், மா. சுப்பராமய்யர்.

## கலிகால விநோதங்கள்.

### புருஷகர்ப்பம்

இரண்டு சிசுக்கள் ஒரு புருஷன் வயற்றிலிருந்தது.

சில வாரங்களுக்கு முன் ஸர்வியாதேசத்தின் தலைநகரான பெல்கிரேட் பெரிய வைத்தியசாலைக்கு 22 வயதுள்ள திடசரீரியான ஸை வொட்டாஸ போவிக் என்பவன் வயிற்றில் தாங்கமுடியாத நோக்காடு ஏற்பட்டிருப்பதைச் சிகிச்சை செய்துக்கொள்ள ஆஸ்பத்திரிக்கு வந்தான் டாக்டர்கள் பரிசோதனைசெய்து பார்த்ததில் பெரியவீக்கம் வயற்றின் வெளிப்பக்கம் காணப்பட்டது. டாக்டர்கள் யாவும் குல்மகட்டியென்றே தீர்மானித்து விட்டனர். உலகத்தில் ரணவைத்தியத்தில் மகத்தான பேறு படைத்த டாக்டர் ஹாரிக் வயிற்றைதிறந்து சோதித்ததில் குழந்தை உருவங்களோடு குழந்தைப்பையில் இரு சிசுகள் இருக்கக்கண்டார், இரண்டும் ஆண்சிசுக்களே ஒன்று 10 அங்குலம் நீட்டு, மற்றொன்று 6 அங்குலம் நீட்டு இருந்தன. இச்சிசுக்களுக்கு தலை, வாய், கழுத்து, சுவாசக்குழாய் விரலில் நகங்களுடன் முதலிய அங்கங்கள் யாவும் சரிவரக்காணப்பட்டன, டாக்டர் அவர்களே இதைப்பார்த்து ஆச்சரியப்பட்டார் என்றால் அந்த பெல்கிரேட் நகரமுழுதும் காட்டுத்தீயைப்போல் பரவிற்று கர்ப்பமாயிருந்த புருஷகர்பிணியின் முகத்தைக்காண பிரதிதினமும் லட்சக்கணக்கான ஜனங்கள் ஆஸ்பத்திரியில் வந்து பார்த்தனர். டாக்டர்கள் மனம் போனவாறு அபிப்பிராயங்கள் கூறினார்கள், அதாவது தாய்வயிற்றில் இப்புருஷன் ஜனிக்கும்போதே இவன் வயிற்றிலே இரண்டு சிசுக்கள் உற்பத்தியாய் இருக்கலாம் என்றார்கள். ஆனால் இது சாஸ்திரத்திற்கு ஒத்திருக்க வில்லை. புருஷகற்பிணிக்காரன் திடசாரியாகவே ஆஸ்பத்திரியில் இன்னும் இருந்து வருகிறான். இது உண்மையான செய்தி அமெரிக்கா "வைத்திய விசாரம்" என்ன பத்திரிகையிலிருந்து எடுத்து மொழி பெயர்க்கப்பட்டது.

நேயர்களே ! இது கலிகாலமல்லவா ? இனிப் பெண்மக்கள் ஓய்வெடுத்துக்கொண்டு விடலாமல்லவா ! கற்பமாகும் வேலையை ஆடவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, ஆடவர்களின்வேலைகளை இனி பெண்மக்கள் ஒப்புக்கொண்டுவிட்டாலும் விடலாம் இக்கலிகாலத்தில் நாமும் நம்மூதாதையாரும் கேட்டிராததும் பார்த்திராததுமான பல ஆச்சரியமான விஷயங்களை யெல்லாம் பார்த்தும் கேட்டும் வருகிறோம்.

பத்திராதிபர்

# செத்துப்பிழைத்தவன் கதை.

கல்கத்தா ஷியாம் பசாரில் ஆசு தோஷ் சவுத்திரி என்பவரின் குமாரன் பரிதோஷ் சவுத்திரி என்பவனுக்கு வயது 22 பள்ளிக்கூடத்துக்கு மாணவன் இவன் ஜனவரீ 11உ வியாதியினால் மிகவும் கேவலமான ஸ்திதியை அடைந்தான். கணக்கில்லாத டாக்டர்கள் பார்த்து கைவிட்டுவிட்டனர். கடைசியில் பார்த்த டாக்டர் கென்குப்தாவும் இவனுக்கு மரணம் நெருங்கிவிட்டதென்று கூறிவிட்டனர். பின் சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் பிராணன் போய்விட்டது. மறுநாள் காலை உயிர்வந்து நாடிகள் சரிவரநடக்க ஆரம்பித்தன, அவன் இரவு நடந்த விந்தையை பின் வருமாறு சொல்லத் தொடங்கினான்.

என்னை இரண்டு பேர்கள் தூக்கிக் கொண்டு போனார்கள். அவர்களை நான் பார்க்க முடியவில்லை. நான் மறு உலகத்திற்கு செல்வதாக தோன்றியது. வழியில் மூன்றாவது ஒருவன் வந்து இது என்ன? நீங்கள் என்ன செய்தீர்கள்? இந்தமனிதனை என் தூக்கிவந்தீர்கள் " என்று கூறினான். அந்தவார்த்தையைக் கேட்டதும், அவர்கள் என்னைத்திடீரென்று போட்டுவிட்டார்கள் பொத்தென்று விழுந்தேன் தன்னைத்தூக்கிச் சென்ற இருவரிடமும், மூன்றாவது மனிதனிடமும் மிகவும் பயந்து விட்டேன். அவர்கள் உடனே வேகமாக ஓடி விட்டார்கள். என்னை பொத்தென்று போட்டவுடன் அவர்களுள் ஒருவன் உரக்கத்தும்பினான். அவன் இருமுறை தும்பிவிட்டு ஓட்டம்பிடித்தான். அதன் பின் நான் விழித்துக் கொண்டேன் என்றான். அவனுடைய தாய், தகப்பனாரும், மற்றும் வந்திருந்த ஜனங்களும், தும்மல் சப்தமும், பொத்தென்று ஏதோ விழுந்த சப்தம் கேட்டதே ஒழிய, இவ்விடம் நடந்ததென்று தெரியவில்லை என்றார், அண்டை அயலார்கேட்டு இவனை ஏராளமான ஜனங்கள் வந்து பிரதி தினம் விசாரிக்கின்றனர். பத்திராதிபர்.

## விநோத விஷயங்கள்.

(79-ம் பக்கத் தொடர்ச்சி.)

### புத்தியில்லாதவன் என்றது.

"அடேய் ஏன்டா, சுத்த புத்தியில்லாதவன் போல இருக்கிறாய்? என்று சுப்பனைப் பார்த்துக் குப்பன் கேட்டான்.

"டேய் டேய்! என்னை புத்தியில்லாதவன் அதாவது மடையன் என்காதே" என்றான் சுப்பன்.

"அடடா நான் வேறு அருத்தம் வைத்துக்கொண்டு சொன்னால் நீ மடையன் என்ற அருத்தங் கொள்கிறாயே"

"அது தான் என்ன அருத்தம்? சொல்"

"புத்தியில்லாதன் : புத்தியில்—ஆதவன்.

புத்தியில் - அறிவில்

ஆதவன் - சூரியனுக்கு ஒப்பானவன் என்ற அருத்தத்துடனன்றோசொன்னேன் இதைக்கேட்டதும் சுப்பன் ஆ,ஹா, ஹாவென்று நன்றாய் நகைக்கலாயினன். தொடரும், S. கிருஷ்ணசாமி.

# ரக்தாக்ஷிவருஷத்திய ரஞ்சிதபோதினியின்
## திருக்கணித சர்வ முகூர்த்த பஞ்சாங்கம்.

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847—பசலி 1333—ஹிஜரி 1342,
கொல்லமாண்டு 1099—1100, இங்கிலீஷ் **1924**ஸ்

| சித்திரை தேதி | ஏப்ரல் மே தேதி | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | ஞா | நவ60 | பூசம்48-53 | சித்60 | ஸ்ரீராமநவமி |
| 2 | 14 | திங் | தச0-43 | ஆயில்ய51-8 | சி51-8மர | தர்மராஜ தசமி |
| 3 | 15 | செ | ஏகா58-55 | மகம்51-20 | சித்60 | கடன் நிவர்த்திக்க |
| 4 | 16 | புத | து55-8 | பூரம்49-38 | அமி60 | வைஷ்ணவ ஏகாதசி |
| 5 | 17 | விய | திர49-25 | உத்தி4ர5-58 | ம45-58சி | பிரதோஷம் |
| 6 | 18 | வெ | சது59-20 | அஸ்த40-50 | அ40-50சி | கரிநாள் |
| 7 | 19 | சனி | ○ 34-18 | சித்தி34-38 | ம34-38அ | சித்திராபௌர்ணமி |
| 8 | 20 | ஞா | பிர25-8 | சுவாதி27-45 | சி27-45ம | சைத்ராபகுளம் |
| 9 | 21 | திங் | துதி16-18 | விசாக20-38 | ம20-38சி | துதிகைஸ்ரார்த்தம் |
| 10 | 22 | செ | திரி7-33 | அனு13-50 | சி13-50ம | அவமாகம் |
| | | | சது59-20 | | | சவுத்தி திதி |
| 11 | 23 | புத | பஞ்51-43 | கேட்7-43 | சித்7-43ம | பொன்-சந்திப்பு |
| 12 | 24 | விய | சஷ்46-18 | மூலம்2-40 | சித்60 | 7-8½முகூர்த்தம் |
| 13 | 25 | வெ | சப்41-53 | பூராட59-0 | சி56-55ம | விதைவிதைக்க |
| 14 | 26 | சனி | அஷ்39-5 | உத்ரா56-55 | சித்60 | ஸ்ரீரங்கம்கருடசேர் |
| 15 | 27 | ஞா | நவமி38-3 | திரு56-28 | ம57-30சி | கரிநாள் [வை |
| 16 | 28 | திங் | தச38-25 | அவிட்57-30 | சித்60 | வியாபாரம் செய்ய |
| 17 | 29 | செ | ஏகா40-15 | சதை60 | மர60 | மரணயோகம் |
| 18 | 30 | புத | துவா43-3 | பூரட்3-5 | அ3-50சி | ருதுசாந்தி இரவு6½ |
| 19 | 1 | விய | திர46-50 | உத்தி8-38 | சித்60 | பிரதோஷம் |
| 20 | 2 | வெ | சது51-58 | ரேவதி14-13 | அமி60 | கிருஷ்ணசதுர்த்தசி |
| 21 | 3 | சனி | ● அ56-38 | அசுவ20-30 | சித்60 | அமாவாசைகத்திரி |
| 22 | 4 | ஞா | பிர60 | பரணி27-20 | சித்60 | வைசாகசுத்தம் |
| 23 | 5 | திங் | பிர1-38 | *கிருத்34-33 | ம34-33அ | கிருத்திகை |
| 24 | 6 | செ | துதி8-20 | ரோக41-58 | அ41-58சி | பரசுராமஜயந்தி |
| 25 | 7 | புத | திரி14-30 | மிருக49-30 | சித்60 | சாத்துமுறை |
| 26 | 8 | விய | சது20-30 | திருவா56-43 | ம56-43 | பிரயாணம் விலக்க |
| 27 | 9 | வெ | பஞ்26 | புனர்60 | சித்60 | சஷ்டி, வித்பாரம்ப |
| 28 | 10 | சனி | சஷ்30-35 | புனர்3-8 | சித்60 | ஜபம் பூர்த்திசெய்ய |
| 29 | 11 | ஞா | சப்33-48 | பூசம்8-28 | சித்60 | கங்கோற்பத்தி |
| 30 | 12 | திங் | அஷ்35-13 | ஆயில்12-13 | சி12-13ம | நவக்ரகசாந்திசெய் |
| 31 | 13 | செ | நவமி34-40 | மகம்14-5 | சித்60 | விஷ்-புண்யகாலம் |